www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்

# தேசம்

சர்வதேச தமிழ் சஞ்சிகை

தேசம் □ இதழ் 26 □ ஜனவரி 06 - மார்ச் 06 □ ISSN 1474 - 8770

## இனப்பிரச்சினைக்கான தீர்வில் வடஅயர்லாந்து தரும் படிப்பினைகள்



## அமெரிக்காவிடம் சோரம் போகும் இந்தியா



## ரிஆர்ஓ நிதி புலிகளின் கைகளுக்குச் செல்லவில்லை






# லண்டனில் ஓங்கும் சமாதானத்துக்கான எழுச்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கனவு நிஜமானது...

லண்டனில் தயாரித்து வெளியிடப்பட்ட டிஜிட்டல் வீடியோ திரைப்படங்களான மாற்று, கனவுகள் நிஜமானால் ஆகிய இரண்டிலும் சிறு பாத்திரங்களில் தோன்றி நடித்த விஜித் தற்போது இலங்கையில் படமாக்கப்பட்ட 35 எம்.எம். படமான "மண்" படத்தின் மூலம் கதாநாயகனாகிறார். 10.11.2005 சனிக்கிழமை ரூட்டிங் ஜவ்னா ஹவுஸ் உணவகத்தில் நடந்த ஊடக வியலாளர் மாநாட்டின் போது சந்தித்து உரையாடிய போது......

"மாற்று" படத்தில் உண்மையில் நான் பிரதான வில்லனின் அடியாள். சிறிய பாத்திரம். ஆனால் அந்தப்படம் தான் எனது நீண்ட நாள் கனவினை நனவாக்கிய படம்.

பின்னர் புதியவன் இயக்கிய கனவுகள் நிஜமானால் படத்தில் கதாநாயகியின் நண்பனாக நடித்தேன். இந்தப் படத்தின் படப்பிடிப்பின் போதே புதியவன் என்னை அடுத்த படத்தில் கதாநாயகனாக்குவதாக கூறினார். நான் பகிடியாக கூறுகிறார் என்று விட்டு விட்டேன். திடீரென்று ஒருநாள் இரவு பதினொரு மணி இருக்கும் ஒரு தொலைபேசி அழைப்பு. மறுமுனையில் புதியவன். என்னிடம் பாஸ்போர்ட் இருக்கிறதா என்று கேட்டு விபரத்தைச் சொன்னபோது என்னால் நம்ப முடியவில்லை.

எனக்குக் கொடுக்கப்பட்ட பாத்திரம் ஒரு வன்னிக் கிராமத்து இளைஞன் என்பது. வன்னிக்கு என் வாழ்நாளில் செல்லாத நான் இலங்கை சென்றதில் இருந்து படப்பிடிப்புக்கள் முடியும் வரை என் பெயரைக்கூட கதாபாத்திரத்தின் பேராக மாற்றி காலணி கூட இல்லாமல் அந்த ஊரின் தெருக்கள், சேற்று வயல்கள், முட்கள், காடு மேடு என்று எல்லா இடமும் திரிந்து என்னை அந்தக் கதாபாத்திரமாக மாற்றினேன். புதியவன் என்னை பொன்ராசாவாக மாற்றினார். என்னுடன் கூட நடித்தவர்களுக்கு என் சொந்தப் பெயர் மறந்து போகும் அளவுக்கு பாத்திரமாகவே மாறினேன். புதியவன் உட்பட தயாரிப்பாளர் கஜேந்திரா தென்னிந்தியக் கலைஞர்கள் எல்லோரும் என்னைப் பாராட்டினார்கள். நல்ல ஒரு படத்தில் நடித்த திருப்தியோடு படத்தின் வெளியீட்டுக்காக காத்திருக்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளே:

01 தேசத்தின் பார்வை
02 லண்டனில் ஓங்கும் சமாதானத்துக்கான எழுச்சி
த ஜெயபாலன் – பொ சிவக்குமார்
05 சிங்கள, தமிழ் பேரினவாதம்
நிஸ்தார் மொகமட்
06 துப்பாக்கி நிழலில் உறங்கும் சாதியம்
எஸ் பாலச்சந்திரன்
09 ரி ஆர் ஓ நிதி புலிகளின் கைகளுக்குச் செல்லவில்லை
Charity Commission
10 இனப்பிரச்சினைக்கான தீர்வில் வட அயர்லாந்து தரும் படிப்பினைகள்
த ஜெயபாலன்
16 முஸ்லீம் எழுத்தாளன்
ரி பூலோகலிங்கம்
18 அமெரிக்காவிடம் சோரம் போகும் இந்தியா
எஸ் வேலு
23 ஈழத்தமிழரின் முதலாவது புலம்பெயர்வு
என் செல்வராஜா
25 UTHR(J)உம் ராஜன் கூலும்
நட்சத்திரன் செவ்விந்தியன்

Chief Editor
T Jeyabalan
0044 208 279 0354
thesam97@hotmail.com
Administrative Editor
T Constantine
0044 791 944 4994
Editorial Board
Technical Support : S Raja
Type Setting : J Srirajani

THESAM
P O Box 35806,
London, UK,
E11 3JX.

# தொடரும் தஞ்சம் கோருவோரின் அவலம்

இலங்கை மோசமான மனித உரிமைகள் மீறப்படுகின்ற நாடு என்பது அதில் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைவருக்குமே தெரிந்த ஒன்று. பிரித்தானியா போன்ற மேற்கு நாடுகளுக்கும் இது தெரிந்த விடயம். அதனால் தான் இலங்கைக்குச் செல்லும் தம் நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு தமது உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் மூலம் எச்சரிக்கை விடுக்கின்றனர். ஆனால் தம் நாடுகளில் தஞ்சம்கோரிய தமிழர்களின் விண்ணப்பங்களை மட்டும் இலங்கையில் சமாதானம் ஏற்பட்டு விட்டதாக ஒரு மாதிரிக் கடிதத்தின் மூலமே நிராகரிக்கின்றன. இவ்வாறு தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை 30,000க்கும் அதிகம் என மதிப்பிடப்படுகிறது.

தொண்ணூறுக்களில் வேகமடைந்த புலம்பெயர்வின் போது பிரித்தானியாவிற்கும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் புலம்பெயர்ந்தனர். இந்த அகதித் தமிழர்களை நம்பி சட்ட நிறுவனங்களும், வீட்டு முகவர் நிறுவனங்களும், தமிழ் அமைப்புகளும், வர்த்தக நிறுவனங்களும் தோன்றித் தம்மை வளர்த்துக் கொண்டன. அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களும் தஞ்சம் கோருபவர்களுக்கு ஒதுக்கிய நிதி மற்றும் வளங்களில் பெரும்பங்கை தாமே நுகர்ந்தன.

மேலும் அரசியல் நலனுக்காக கட்சிகள் தஞ்சப் பிரச்சினையை கையிலெடுப்பதும் வலதுசாரி ஊடகங்கள் அதனை ஊதிப் பெருப்பிப்பதும் தஞ்சம் கோருவோர் மீது மேலும் மேலும் அழுத்தங்களை ஏற்படுத்தியது. தஞ்சம் கோருவோருக்கான நிதி மற்றும் வளங்களில் கட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டதும் புற்றீசல்கள் போல் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் சட்ட நிறுவனங்களும், வீட்டு முகவர் நிறுவனங்களும், மற்றும் சமூக அமைப்புகளும் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட தமிழர்களை கண்டுகொள்ள மறுக்கின்றனர். Green Foamஇல் தாம் நினைத்த தொகையை எழுத முடியாமல் இருப்பதால், தாம் நினைத்தபடி Fresh Application போட முடியாமல் இருப்பதால் சட்டத்தரணிகள் தஞ்சம் நிராகரிக்கப்பட்டவர்களை சந்திக்க விரும்புவதில்லை.

பிரித்தானியாவில் நூறு வரையான தமிழ் சட்டத்தரணிகள் பல ஆயிரம் தஞ்ச விண்ணப்பங்களை கையாண்டிருந்த போதும் தமிழர்களின் சிக்கலான வழக்குகளை வென்றெடுத்ததும் தமிழர்கள் விடயத்தில் உள்துறை அமைச்சின் கொள்கைகளுக்கு எதிராக வாதிட்டு வெற்றி பெற்றதும் டேவிட் பேஜ்சஸ் என்பது குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலத்தில் தமிழ் சட்ட அமைப்புகளின் தவறான அணுகுமுறையால் திருப்பி அனுப்பப்படும் நிலையில் இருந்த வழக்குகளை ராஜேஸ்குமார் - சாய்மன் கியூச் கூட்டு வென்றெடுத்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கையை பாதுகாப்பான நாடுகளின் பட்டியலில் சேர்த்த உள்துறை அமைச்சின் முடிவுக்கு எதிராக ராஜேஸ்குமார் வழக்குத் தொடுத்து உள்ளார். இவ்வழக்கு வெற்றி ஈட்டுகிறதோ இல்லையோ form நிரப்பிக் கொடுக்கும் சட்டத்தரணிகளில் இருந்து மாறுபட்டு எமது உரிமைகளுக்காகப் போராட வேண்டும் என்ற உணர்வு சில சட்ட நிபுணர்கள் மத்தியில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது. இவற்றுடன் சார்பு நிலைகளில் இருந்து விடுபட்டு ஒரு பொது நோக்குடனான போராட்டங்களும் மிகவும் அவசியம். தமிழர்கள் தனித்து நின்று போராடுவதுடன் ஏனைய சமூகங்களுடனும் இணைந்து போராடக் கற்றுக் கொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# லண்டனில் ஓங்கும் சமாதானத்துக்கான எழுச்சி

சமாதானத்தை வலியுறுத்தி லண்டனின் போராட்ட மையமான ரபல்கர் ஸ்கயரில் அமைதியான போராட்டம் இடம்பெற்றது. இலங்கையில் மனித உரிமைகளை வலியுறுத்தும் Tamil Forum for Peace இப்போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது. கொட்டும் மழையையும் கடும் குளிரையும் பொருட்படுத்தாமல் இலங்கையில் நிரந்தர சமாதானத்தை வலியுறுத்தி நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மனித உரிமை மீறல்களைக் கைவிட்டு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட வேண்டும் என போராட்டக்காரர்கள் அழைப்பு விடுத்தனர்.

இப்போராட்டத்திற்கு முன்னதாக Tamil Forum for Peace சமாதானத்தை வலியுறுத்தி லண்டன் பல்கலைக் கழக கல்லூரியின் விரிவுரை மண்டபத்தில் பெப்ரவரி 5ல் ஒன்றுகூடல் ஒன்றையும்ஏற்பாடுசெய்திருந்தது. நூறுவரையான பார்வையாளர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்வில் தொழிற்கட்சியின் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ரொபேட் இவான்ஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

டொக்டர் நிக்கலஸ் பிள்ளை தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வை மனித உரிமைவாதி நிர்மலா ராஜசிங்கம் ஒன்றுகூடலின் நோக்கத்தை தெரிவித்து ஆரம்பித்து வைத்தார். சைய்ட் பசீர் -முஸ்லீம் தகவல் மையம், ஆர் ஜெயதேவன் - தமிழர் ஜனநாயகக் காங்கிரஸ், எழுத்தாளர் ராஜேஸ்பாலா, அரசியல் ஆய்வாளர் வி சிவலிங்கம், மக்கையற்கரசி அமிர்தலிங்கம் ஆகியோர் அங்கு உரையாற்றினர்.

### டொக்டர் பாலா

"யுத்தத்திலும் பார்க்க சமாதானம் நல்லது ஏனென்றால் யுத்தத்தில் மகனின் உடலை தந்தை புதைப்பார். ஆனால் சமாதானத்தில் தந்தையின் உடலை மகன் புதைப்பார்."

## சைய்ட் பசீர் - முஸ்லீம் தகவல் மையம்

முஸ்லீம் மக்கள் அன்று முதல் இன்று வரை ஆயுதக் குழுக்களினால் எப்போதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். தற்போது ஏற்பட்டுள் கருணா பிரச்சினையிலும் அவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.



புலம்பெயர் நாடுகளில் ஜனநாயக அமைப்புகளிடையே எழுச்சி ஏற்பட்டு உள்ளது. ஜனநாயக வாதிகளை விடுதலைப் புலிகள் தேசத் துரோகிகளாக காட்டுகின்றனர். இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டும். முஸ்லீம் மக்களும் தேசத் துரோகிகளாக காட்டப்படுகின்றனர். இதன் மூலம் சமாதான பேச்சு வார்த்தையில் முஸ்லீம்களின் பிரதிநிதித்துவத்தை நிராகரிக்கின்றனர். எதிர்கால பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்கள் தனித்தரப்பாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

முஸ்லீம்களும் தமிழர்களும் ஒரே மொழியையே பேசுகின்றனர், ஆனால் அவர்களுக்கு வெவ்வேறு அரசியல் அபிலாசைகள் உள்ளன. ஆனாலும் தமிழ் மக்களுடன் கை கோர்த்து சகோதரத்துவத்துடன் வாழுகின்றனர்.






www.tamilarangam.net

## ஆர் ஜெயதேவன் - தமிழர் ஜனநாயகக் காங்கிரஸ்



நானும் வி.புலிகளுக்கு ஆதரவாக இருந்தவன். பாலசிங்கம் நோய் வாய்ப்பட்டு இருந்த போது இலங்கையை விட்டு வெளியேற நான் உதவினேன். ஆனால் நானும் விவேகானந்தனும் வன்னியில் அனுபவித்த சித்திரவதைகள் நீங்கள் அறிந்ததே.

பன்மைத்துவத்தை வி.புலிகள் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த சபையில் வி.புலிகளின் பிரதிநிதிகளும் வந்திருக்கிறீர்கள் நீங்கள் இந்த செய்தியை தயவு செய்து உங்கள் தலைமையிடம் எடுத்துச் செல்லுங்கள். பன்மைத்துவத்தை மறுத்தால் ஜனநாயகம் ஏற்படும் பட்சத்தில் வி.புலிகளின் எதிர்காலம் கடினமானதாகவே அமையும்.

ஏகபிரதிநிதித்துவம் சட்டபூர்வமானதல்ல. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளுமல்ல. இந்த யுத்தத்திற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பேற்க வேண்டும்.

## ரொபேட் இவான்ஸ் - தொழிற்கட்சியின் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்

இந்த சமாதானத்துக்கான ஒன்று கூடல் சரியான தருணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இது மிக மிக முக்கியமானது. ஜெயதேவனுக்கு ஏற்பட்ட பயங்கரத்தை நான் கேள்விப்பட்டேன். முக்கியமானவர்களை நான் சந்தித்தேன்.

இலங்கையில் நடக்கும் யுத்தம் யாருக்கும் நன்மை பயக்கவில்லை. யாரும் வெல்லப் போவதும் இல்லை. அயர்லாந்து, சைப்பிரஸ், வட மத்திய கிழக்கு எங்கும் சமாதானமே நிரந்தரத் தீர்வு. ஜனநாயகச் செயன்முறைக்கு ஒவ்வொருவரும் வி.புலிகளானாலும் சரி இலங்கை அரசாங்கம் ஆனாலும் சரி விட்டுக்கொடுப்புகளைச் செய்ய வேண்டி இருக்கும். ஏனைய நாடுகளில் உள்ள தீர்வுமுறைகளைப் பார்த்து இலங்கைக்கு ஏற்ற தீர்வை செதுக்க வேண்டும்.



தொழிற்கட்சியின் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ரொபேட் இவான்ஸ்

புலிகளைத் தடை செய்வது எந்த நன்மையையும் ஏற்படுத்தப் போவதில்லை.வி.புலிகளுடன் மல் யுத்தத்துக்கு செல்ல வேண்டியதில்லை. அவர்களுக்கான மதிப்பை அளித்து சமாதான வழிக்கு அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

## எழுத்தாளர் ராஜேஸ்பாலா

நாங்கள் பேசமுடியாது, பாட முடியாது ஆட முடியாது. ஏ கே 47 மட்டுமே பேசும்.

ஆனையிறவு யுத்தத்தில் 16 வயதுக்கு உட்பட்ட 524 சிறுவர் - படையணியைச் சேர்ந்த சிறுவர்கள் கொல்லப்பட்டனர். ஆனால் எமது குழந்தைகளை மட்டும் பிறைவேட் ஸ்கூலுக்கு அனுப்பி யூனிவேர்சிட்டிக்கும் அனுப்புகின்றோம்.

இந்திராகாந்தியின் உதவியுடன் சிங்கள இளைஞர்கள் பல நூற்றுக் கணக்கில் கொல் லப்பட்டனர். நாங்கள் அதற்காகக் குரல் கொடுக்கவில்லை. மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டபோதும் நாம் குரல் கொடுக்கவில்லை. முஸ்லீம்கள் கொல்லப்பட்ட போதும் சில மணி நேரங்களில் யாழில் இருந்து வெளியேற்றப்பட்ட போதும் அவர்களுக்காக நாம் போராடவில்லை.




லண்டனிலும் பாரிசிலும் ரொறன்ரோவிலும் உள்ளவர்களே தமிழீழம் கேட்கின்றனர். 56 நாடுகளில் பல்வேறு மொழி பேசி வாழும் இவர்கள் ஏன் சிங்களவர்களுடன் வாழ முடியவில்லை. மட்டக்களப்பு மோர்தின்னி முட்டாள்கள், சிங்கள மோடையர்கள், முஸ்லீம் துரோகிகள் ...... யாரோடு வாழ்வது.

தமிழீழம் இனிமேல் சாத்தியமில்லை. மட்டக்களப்பு தமிழர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். சமாதான காலத்திலேயே கிழக்கு தமிழர்களும் முஸ்லீம்களும் ஒடுக்கப்படுகிறார்கள். வடக்கு கிழக்கு இணைவும் சாத்தியப்படாது.

இது யுத்தத்தை நிறுத்துவதற்கான நேரம். எமது நாட்டில் எல்லா வளங்களும் உண்டு எமக்கு யுத்தம் அவசியமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அரசியல் ஆய்வாளர் வி சிவலிங்கம்




ஊடகங்கள் இனவாதத்தைக் கக்குகின்றன. தமிழ், சிங்கள தரப்புகள் யுத்தத் துக்கு தயார் என்று முழங்குகின்றன. இரு தரப்பும் ஆயுதக் குவிப்பில் ஈடுபட்டு உள்ளதால் யுத்த அச்சம் உள்ளது. உளவுத்துறைகளின் செயற்பாடுகள் அதிகரித்து உள்ளது.

நடமாட்டம் கட்டுப்படுத்தப்படுகிறது. இலங்கை அரசின் அடையாள அட்டைகளும் தமிழ் தரப்பின் புலனாய்வுகளும் மக்களை நெருக்குகின்றது.

குழந்தை இராணுவம், வெளிநாட்டுத் தமிழர் களிடம் நிதி சேகரிப்பு என்பனவும் மறுபக்கம் இலங்கை அரசு பெருமளவு நிதியை பாதுகாப்பு செலவீனத்துக்கு ஒதுக்கி இருப்பது என்பன சமாதானத்தை தொலைவிலேயே நிறுத்தி உள்ளன. இரு தரப்பு தலைமைகளும் தங்கள் நடவடிக்கைகளுக்கு பதில் சொல்ல வேண்டும்.

## ஒரு பேப்பர் பாலா - ஜெயதேவன்

கூட்டத்தின் இறுதியில்ஒருபேப்பர் பாலா தந்தை செல்வா தமிழீழத்தின் அவசியம் பற்றி பேசிய உரையை வாசிக்க ஆரம்பித்தார். இவர் ஏற்கனவே சில கூட்டங்களில் குழப்பம் ஏற்படுத்தியதாகக் குற்றம்சாட்டிய பார்வையாளர்கள் அவருக்கு தந்தை செல்வாவைப் பற்றி கதைக்கத் தகுதி இல்லை என்று குற்றம்சாட்டினர். அதனைத் தொடர்ந்து கூட்டத்தில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. "ஏன் பயப்படுகிறீர்கள். என்னைப் பேச சில நிமிடங்கள் விடுங்கள்" என்று கேட்டார் பாலா. "அனுமதிக்காமல் விடுவது ஜனநாயக விரோதம்" எனத் தெரிவித்தார். அதற்குப் பதிலளித்த ஆர் ஜெயதேவன் "ஜனநாயகத்தைப் பற்றி கதைக்க உமக்கு என்ன தகுதி இருக்கிறது. என்னை கொல்லச் சொல்லி வன்னிக்கு தகவல் கொடுத்ததில் நீரும் ஒருவர் தானே" என்று குற்றம் சாட்டினார். அதனைத் தொடர்ந்து பாலா மேடையிலிருந்து இறங்கி ஏனையவர்களுக்கு வழிவிட்டார். ☞








## மங்கையற்கரசி அமிர்தலிங்கம்




இலங்கை செல்வச் செழிப்பு மிக்க நாடு. தந்தை செல்வாவின் காலத்தில் வாய் திறந்து பேசலாம். ஆனால் இன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட விடுதலைப் புலிகளின் mouth piece ஆக உள்ளனர். இந்த சீரழிவுக்குக் காரணம் விடுதலைப் புலிகள்தான். மற்றைய இயக்கங்கள் செய்யும் தவறுகளை விரல் நீட்டிக்காட்டலாம். ஆனால் புலிகளின் தவறுகளைச் சுட்டிக்காட்ட முடியாது.

இந்தியாவும் ஏனைய நாடுகளும் இணைந்து இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். தமிழ் மக்களுக்கு பலமான அமைப்புத் தேவை ஆனால் தமிழ் மக்களையே கொன்றொழிக்கும் அமைப்புத் தேவையில்லை. இன்று எமது நிலை தமீழத்தைக் கேட்டு புலி வாலைப் பிடித்த கதையாகிவிட்டது.

பத்திரிகைச் சுதந்திரம் இல்லை. சாப்பாட்டுக்கு மட்டுமே வாய் திறக்க முடியும். வன்னி சென்றால் காசு, யாழ் சென்றால் காசு கேட்கின்றனர். அங்குள்ளவர்களை கொல்ல இங்கு பணம் கொடுக்கின்றனர். புலிகளிடம் சொல்லுங்கள் சமாதானம் வேண்டுமென்று. யுத்தவெறி, இரத்தவெறி, மக்களை ஆக்ரோசமாகச் கொல்லும் இந்த பி**** இருக்கும் வரை சமாதானம் வராது.

**தொகுப்பு : த ஜெயபாலன் – பொ சிவக்குமார்**

www.tamilarangam.net



# சிங்கள பேரினவாதம் தமிழ்

நிஸ்தார் மொகமட்
சட்டத்தரணி

சிங்கள பேரினவாதிகள் இந்த உலகத்திலே தங்களுக்குரிய முதலும் முடிவுமான நாடு இலங்கை தான் அதில் யாருக்கும் பங்கில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருப்பது போல வே விடுதலைப் புலிகளின் நடவடிக்கையும் அமைந்துள்ளது. தமிழருக்கான முதலாவது என்றில்லாவிட்டாலும் இறுதியான தனிநாடு தமிழீழம். அதில் யாருக்கும் பங்கில்லை என்ற நிலைப்பாடே அது. ஆகவே விடுதலைப் புலிகள் தமது இருப்பையும் தமிழீழத்தின் இருப்பையும் அதற்கான நிரந்தரப் பாதுகாப்பையும் ஏற்படுத்து வதை நோக்கமாகக் கொண்டுள்ளனரே அன்றி மற்ற விடயங்கள் தொடர்பாக அவர்களிடம் யாரும் எதையும் எதிர்பார்க்க முடியாதுள்ளது. அதாவது, சிங்கள பேரினவாதிகளி டம் இருந்து தமிழினம் எதையும் எப்போதும் பெற்றுவிட முடியாது என்ற பாலசிங்கத்தின் கூற்றினை, விடுதலைப் புலிகள் இலங்கைச் சோனகர் விடயத்தில் கொண்டுள்ள போக்கு அப்படியே பிரதிபலிப்பதைக் காணலாம். இதை உறுதி செய்வதாக பின்வரும் சம்பவங்கள் அமைகின்றன.

முதலாவது, ஆரம்ப ஆறு கட்டப் பேச்சவார்த்தை களில் இலங்கை சோனகர் தனிப்பிரிவாகக் கலந்து கொள்வதை விடுதலைப் புலிகள் தடுத்தமை. இதற்கான மதியுரைஞரின் விளக்கம்: "இலங்கை முஸ்லீம்கள் தமக்குள் ஒற்றுமையாகி தமக்குள் ஒரு தலைமையைத் தேர்ந்தெடுங்கள், பிறகு தனிப் பிரதிநிதித்துவம் பற்றி யோசிக்கலாம்" என்பதாகும்.

நான் ஏற்கெனவே 'தேசம்' சஞ்சிகையில் அடையாள இருட்டடிப்பு என்ற கட்டுரையில் சுட்டிக்காட்டியது போன்று முன்னைய அரசும் இதே மாதிரியான விளக்கத்தை விடுதலைப் புலிகளுக்குச் சொல்லியிருக்க, அதாவது தமிழ்த் தரப்புக்கள் எல்லோரும் ஒன்றுபட்டு ஒரு பொதுத் தலைமையைத் தயார் செய்யுங்கள், அதன் பிறகு பேச்சுவார்த்தை பற்றி யோசிக்கலாம் என்றிருந்தால், இன்றும் பேச்சுவார்த்தை பற்றி விடுதலைப் புலிகள் மூச்சுவிட முடியாது. ஏனெனில் டக்ளஸ் தேவானந்தா, ஆனந்த சங்கரி, இப்பொழுது கேணல் கருணா இன்னும் யார் யாரோ எல்லாம் தமிழினத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துவதை விடுதலைப் புலிகள் மறுதலிக்க முடியாது.

இரண்டாவது, விடுதலைப் புலிகளின் இடைக் கால தன்னாட்சி அதிகாரசபை (ISGA), இதில் 100 சதவீதம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதித்துவம் காணப்படுகின்றது. தமிழினத்தை சிங்களப் பிரதிநிதிகள் எவ்வாறு புரிந்துகொள்ள முடியாதோ, முழுமையாகப் பிரதிநிதித்துவப்படுத்த முடியாதோ, அது போலவே இலங்கை சோனகரை தமிழ்ப் பிரதிநிதிகள் அதிலும் குறிப்பாக விடுதலைப் புலிகள் முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. மேலும், இந்த ISGA வடக்கும், கிழக்கும் ஒன்றிணைக்கப்பட்ட ஆட்சிப் பிரதேசத்தை நிர்வ கிக்கச் செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆலோசனையாகும். இந்த இணைப்பு ஏற்பட்டால் இலங்கை சோனகரின் சனத்தொகைப் பரம்பல் விகிதாசாரம் இப்போது உள்ளதை விட அரைப் பங்காகக் குறைவதோடு, பிரதிநிதித்துவமே இல்லாத நிலையில் தமிழீழத்தின் அடிமைப் பிரஜைகளாக தாங்கள் வருவதை எந்தச் சோனகரும் விரும்பமாட்டார்கள்.

ஆனால் உத்தேச ISGA இனி எப்போதாவது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டின் இலங்கை சோனகருக்கு அதில் நியாயமான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

மூன்றாவதும் மிக மோசமானதுமான சம்ப வம் 2004 டிசம்பர் சுனாமிக்குப் பின்னான மீள்கட்டுமான ஏற்பாடுகளாகும். சுனாமி கொடியது. ஆனால் விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு வெட்கித் தலைகுனிய வைப்பது. இலங்கைத்தீவில் சுனாமியால் பாதிக்கப்பட்ட சகல இன மக்களிலும் 50 சதவிதத்திற்கு மேலானோர் இலங்கை சோனகர். இது தமிழீழப் பகுதியில் மாத்திரமல்ல தென்னிலங்கை .. (தொடர்ச்சி பக் 21)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூகம்

# துப்பாக்கி நிழலில் உறங்கும் சாதியம்

எஸ் பாலச்சந்திரன்



இலங்கையின் வடக்குப் பகுதியில் நிலவும் சாதிப் பிரச்சனை தொடர்பாக கட்டுரை ஒன்றை எழுத திட்டமிட்டு, யாழ் உயர் சாதி தமிழர் ஒருவரிடம் கருத்துக் கேட்டேன். உடனே அவர் "சாதி குறித்து எழுதாதே. மீறி எழுதினால் நீ ஒரு தமிழ்த் தேசியத் துரோகியாவாய்" என்றார். இதைக் கேட்டதும் ஒரு கணம் திடுக்கிட்டேன். ஆச்சரியம் அடைந்தேன். ஏனெனில் நான் இதுவரை ஸ்டாலின் குறித்து எழுதினேன். மாஓ சேதுங் பற்றி எழுதினேன். புத்தர் பற்றி எழுதினேன். சிறப்புமுகாம் சித்திரவதைகள் குறித்து எழுதினேன். அப்போதெல்லாம் பாராட்டி தொடர்ந்து எழுதும்படி உற்சாகம் ஊட்டியவர் சாதியைப் பற்றி எழுதப்போகிறேன் என்றதும் "எழுதாதே. எழுதினால் தமிழ்த் தேசியத் துரோகி" என்று சாபம் இடுகின்றார். உண்மைதான். சாதீயம் அந்தளவிற்கு ஆழவேரூன்றி விருட்சமாக வளர்ந்துள்ளது. அதன் ஆணிவேரை அசைக்க முற்பட்டால் துரோகி என்ற பட்டம் மட்டுமல்ல தோட்டாவையும் யாழ் மேலாதிக்க வாதம் பரிசாக வழங்கும்.

1983 கலவரத்தின் போது தென்னிலங்கைப் பகுதியிலிருந்த தமிழர்கள் சிங்களக்காடையினரால் தாக்கப்பட்ட நிலையில், உடைமைகளைப் பறிகொடுத்த நிலையில் பரிதாபகரமான நிலையில் பஸ்களில் வந்து இறங்கிக் கொண்டிருந்தனர். இவ்வாறு நெல்லியடி என்னும் பகுதியில் பாதிக்கப் பட்டவர்கள் வந்து இறங்கியபோது அதைப் பார்த்துக் கொண்டிருந்த 'கனப்பொல' கிராமத் தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்த சிலர் இதனை வெள்ளாளர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சண்டையாம் என்று கூறினார்கள். இதைக் கேட்டு நான் ஆச்சரியப்படவில்லை. ஏனெனில் அன்றைய நிலை அதுதான். அவர்களையும் தமிழர்களாக உயர் சாதியினர் ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் அவர்கள் உயர் சாதியினரின் சாதீயக் கொடுமைகளில் இருந்து விடுதலை பெற தங்கள் கிராமத்திற்கு 'கனப்பொல' என சிங்களப் பெயர் சூட்டி புத்த பிக்கு ஒருவரை வரவழைத்து புத்த ஆலயம் ஒன்றையும் உருவாக்கினார்கள். நல்ல வேளையாக சிங்கள இராணுவம் சாதி வேறுபாடு இன்றி, பிரதேச வேறுபாடு இன்றி தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் தாக்கியதால் அதற்கு எதிராக தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் திரட்டுவது இயக்கங்களுக்கு இலகுவாக அமைந்தது. இன்று அதன் மேல் தமிழ்த் தேசியம் கட்ட முனைகின்றனர். ஆனால் அதன் அடித் தளத்தில் உள்ள சாதீயப் பிரச்சனை உள்ளிட்ட அனைத்துப் பிரச்சனைகளும் தீர்க்கப்படாமல் அவ்வாறே உள்ளது என்பதே உண்மையாகும்.

*83 கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள் தென்னிலங்கையிலிருந்து வந்து இறங்கியபோது அதைப் பார்த்துக் கொண்டிருந்த 'கனப்பொல' கிராமத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்த சிலர் இதனை வெள்ளாளர்களுக்கும் சிங்களவர்களுக்கும் சண்டையாம் என்று கூறினார்கள்.*

1989ம் ஆண்டுப் பகுதியில் இந்திய இராணுவத் திற்கெதிராக புலிகள் இயக்கம் போராடிக் கொண்டிருந்த போது கரவெட்டிப் பகுதியில் அதன் ஒரு பிரிவுக்கு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் பொறுப்பு வகித்தார். அவருடன் அவருடைய சாதியைச் சேர்ந்த இளைஞர்களே பெரும்பாலும் இருந்தனர். அவர் புலிகள் இயக்கத்தில் சேர்ந்து இந்திய இராணுவத்திற்கு எதிராக போராடினாலும் கூட அவர் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்பதால் அவருக்கும் அவருடைய சக போராளிகளுக்கும் உயர் சாதியினர் உணவு வழங்க மறுத்தனர். தங்குமிடம் கொடுக்க மறுத்தனர். குடிப்பதற்கு தண்ணீர் கூட கொடுக்க தயங்கினர். இதனால் அவர் பல தடவை இந்திய இராணுவத்தின் தாக்குதலுக்குள்ளானார். தனது போராளிகள் பலரை இழந்தார். அப்போது அவரிடம் ஒருவர் "தமிழ் ஈழம் கிடைத்தால் என்னவாகும்" என்று கேட்டார். அதற்கு அப் பொறுப்பாளர் எவ்வித தயக்கமும் இன்றி "என் சாதி மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகதிகளாக அநுராதபுரம் செல்ல நேரிடும்" என்று கூறினார். இதில் ஆச்சரியப்பட எதுவும் இல்லை. அந்தளவுக்கு சாதியக் கொடுமைகளை அவர் அனுபவித்திருந்தார். அன்று மட்டுமல்ல இன்றும் கூட இந்த நிலைமைதான் உள்ளது. மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

இந்நிலை குறித்து லண்டனுக்கு வருகை தந்த மதிப்புக்குரிய தங்கவடிவேல் மாஸ்டரிடம் (படம்) கேட்டபோது அவர் "சாதீயம் நீறுபூத்த நெருப்பாக உள்ளது. அது என்றாவது ஒருநாள் மீண்டும் பற்றி எரியும்" என்றார். இவருடைய இக் கூற்று மறுக்க முடியாத உண்மையாகும். எனவே உண்மையாகவே தமிழ் தேசியத்தை விரும்புவோர் முதலில் சாதீயத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து சாதீயத்தை ஒழிப்பதற்கு முன் வரவேண்டும். அவ்வழியிலேயே தமிழ்த் தேசியத்தைக் கட்டியெழுப்ப முயலவேண்டும். மாறாக அடக்கி ஒடுக்கி பல வந்தமாக அவர்கள் கூறும் தமிழ் தேசியத்தைக் கட்டியெழுப்பினால் அது என்றாவது ஒருநாள் பீறிட்டு வெடித்துக் கிளம்பி போலியாக கட்டி எழுப்பிய தமிழ் தேசியத்தை சுக்கு நூறாக்கும்.



புலிகள் இயக்கத்தில் உப தளபதியாக இருந்த ராகவன் அவர்களும் "வடக்கில் நிகழும் இச் சாதிப்பிரச்சனை தீர்க்கப்படாவிடின் தமிழ் மக்கள் விடுதலை பெறமுடியாது" என்று கூறினார். (இவர் இச்சாதீயப் பிரச்சனை குறித்து ஒரு சிறந்த ஆய்வு ஒன்றைச் செய்துள்ளார். இதனை அவர் விரைவில் பிரசுரம் செய்ய வேண்டும் என விரும்புகிறேன்.)

இலங்கையில் குறிப்பாக வடக்கில் உள்ள தமிழர்கள் மத்தியில் சாதி முறையும் தீண்டாமையும் பல வருடங்களாக இருந்து வருகின்றன. சாதி அமைப்பு என்பது இலங்கை முழுவதிலும் சிங்களவர் தமிழர் இருசாரார் மத்தியிலும் இருந்து வருகின்றது. ஆனால் வடக்கில் உள்ள தமிழர்கள் மத்தியில் தீண்டாமை என்ற நாசமும் சேர்ந்து இருக்கின்றது. நளவர், பள்ளர், பறையர் போன்ற சில சாதிகள் தீண்டப்படாத சாதிகளாக கருதப்படுகின்றனர். இவர்கள் தமிழர்களாக மட்டுமன்றி மனிதர்களாகவும் கருதப்படவில்லை. இது மனிதன் மனிதனுக்குச் செய்யும் மிக மோசமான கொடுமை என்றே கூறவேண்டும்.

## "தமிழ் ஈழம் கிடைத்தால் என்னவாகும்"

## "என் சாதி மக்கள் அகதிகளாக அநுராதபுரம் செல்ல நேரிடும்"

சாதி அமைப்பு என்பது நிலப்பிரபுத்துவத்தின் ஒரு மிச்ச சொச்சமாகும். இலங்கையில் முதலாளித் துவம் ஒழுங்காக இல்லாமல் ஏற்ற இறக்கமாக வளர்ந்துள்ள படியால்தான் சாதி அமைப்பு இன்னமும் நின்று பிடிக்கிறது. ஆளும் வர்க்கத்தின் அரசு இயந்திரம் அது அழியாமல் இருப்பதற்கு துணைபுரிகிறது. எனவே சாதீயத்திற்கு எதிரான போராட்டம் பிற்போக்கு ஏகாதிபத்திய சார்பு சக்திகளுக்கு எதிரான தேசியப் போராட்டத்தின் ஒரு பகுதியாகும். தங்களைத் தாங்களே முற்போக்கு சக்திகள் என்று கூறிக்கொள்ளும் சிலர் இதனைப் பார்க்கவோ புரிந்து கொள்ளவோ மறுக்கின்றனர். இப் போராட்டத்தை முன்னெடுக்க தயங்குகின்றனர். இதுவே இன்றைய யதார்த்த நிலையாகும்.

இந்தியாவில் உயர்சாதியினரான பிராமணர் வெறும் மூன்று வீதமே சனத்தொகையில் உள்ளனர். ஆனால் தாழ்த்தப்பட்ட சாதியினர் சனத்தொகையில் பெரும்பான்மையினராக இருப்பதால் பாராளுமன்ற அரசியலில் சில சலுகைகளை பெறமுடிகிறது. ஆனால் இலங்கையில் வடக்குப் பகுதியில் உயர் சாதியினர் பெரும்பான்மையினராகவும் தாழ்த் தப்பட்ட சாதியினர் முப்பது சதவீதமாக சிறுபான்மையினராக இருப்பதனால் எந்தப் பாராளுமன்றக் கட்சியும் உயர் சாதியினரைப் பகைத்துக் கொள்ளவோ, புண்படுத்திக் கொள்ளவோ விரும்பவில்லை. தாழ்த்தப்பட்ட சாதியினர் முப்பது சதவீதமாக இருந்தும் கூட அவர்கள் எந்தத் தேர்தல் தொகுதியிலும் பெரும்பான்மையைப் பெறமுடியாத விதத்தில் தேர்தல் தொகுதிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன. தேர்தல்கமிஸன் மற்றும் அதிகாரவர்க்கம் அனைத்திலும் உயர்சாதியினர் இருப்பதால் அவர்களால் இவ்வாறு தந்திரமாக செய்ய முடிந்தது.

ஆனால் இந்த நிலைமை தோழர்.சண்முகதாசன் தலைமையிலான கம்யுனிஸ்ட் கட்சியின் தோற்றத்துடன் மாறியது. ஏனெனில் அவருடைய கட்சியானது பாராளுமன்றப்பாதையை நிராகரித்து புரட்சிகர ஆயுதப்போராட்டத்தை முன்வைத்தது. அது தாழ்த்தப்பட்ட மக்களின் சாதீயத்திற்கு எதிரான போராட்டத்திற்கு துணிச்சலான தலைமையைக் கொடுக்க முன்வந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1966ம் ஆண்டு அக்டோபர் 21ம் தேதி சாதி அடக்கு முறைக்கும் தீண்டாமைக்கும் எதிரான வெகுஜன இயக்கம் கம்யுனிஸ்ட் கட்சியின் தலைமையில் சுன்னாகத்தில் இருந்து யாழ் முற்றவெளிக்கு ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை ஒழுங்குபடுத்தியது. பொலிசாரும் உயர் சாதியினரும் இவ்ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை தடுத்த நிறுத்த எவ்வளவோ முயன்றார்கள். ஆனால் தடைகளை உடைத்தெறிந்து ஆயிரக்கணக்கான மக்கள் முற்றவெளியில் திரண்டார்கள். அங்கு அம்மக்கள் மத்தியில் உரையாற்றிய தோழர்.சண்முகதாசன் (படம்) அமெரிக்க நீக்ரோ பாடகர் போல் போப்சனுக்கு அவருடைய சகோதரர் கூறிய புத்தி மதியை மேற்கோள் காட்டினார். "ஒரு போதும் அடி பணிந்து போகாதே. எதிர்த்து நின்று அவர்கள் அடிப்பதிலும் பார்க்க கடுமையாக அடி. அவர்கள் படிப்பினையைப் பெற்றதும் விடயங்கள் வித்தியாசமாக இருக்கும்"

இதன்பின் நிலைமை மாறியது. தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து நூற்றுக்கணக்கான போராளிகள் தோன்றினார்கள். புதிய உணர்வு கொண்ட இப் போராளிகள் அடிக்கு அடி கொடுத்தார்கள். இவர்களுடைய போராட்டம் ஆலயப்பிரவேசம், தேனீர் கடைப் பிரவேசம், பொதுக் கிணறுகளில் தண்ணீர் அள்ளுதல் ஆகியவற்றைச் சுற்றி நடைபெற்றது. ஆனால் இன்னும் வேறு வடிவங்களில் இப் போராட்டம் நடைபெற்றது. சில போராட்டங்கள் வன்முறையான வடிவத்தில் நடைபெற்றன.



தாழ்த்தப்பட்ட மக்களின் சாதீய ஒடுக்கு முறைக்கு எதிரான இப்போராட்டத்தில் பொலிசார், நீதிமன்றங்கள், அதிகாரிகள் ஆகிய முழு அரசு இயந்திரமும் உயர் சாதியினருக்கு ஆதரவாக செயற்பட்டன. மாஜி மந்திரியாகிய சுந்தரலிங்கம் போன்றவர்கள் வெளிப்படையாக உயர் சாதியினருக்கு ஆலோசகர்களாக செயற் பட்டனர். இவ்வேளையில் சங்கானை என்னும் கிராமத்தில் உயர் சாதியைச் சேர்ந்த ஒருவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவரின் சவ ஊர்வலத்தின் பாதையை மறித்து அவ் ஊர்வலத்தின் மீது சுட்டார். இத் துப்பாக்கிச் சூட்டிற்கு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவர் பலியானார். கண்துடைப்பிற்காக சுட்டவரைக் கைது செய்த பொலிஸ் அவரை வெறும் 250 ரூபா பிணையில் பிணையில் விடுவித்தது. நீதிமன்றம் அவரை நிரபராதி என்று கூறி விடுதலை செய்தது. போலிஸ், நீதிபதி எல்லாம் உயர் சாதியினருக்கு ஆதரவாக இருந்தமையினால் இவ்வாறு நடந்தது. எனவே இவ் அமைப்பில் தமக்கு நீதி கிடைக்காது என்பதைப் புரிந்து கொண்ட தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த போராளிகள் அன்று மாலை சங்கானைச் சந்தையில் வைத்து அக் குற்றவாளியைச் சுட்டுக்கொன்றனர்.

இதே போன்று இந்தியாவில் தஞ்சாவூரில் கீழ்வெண்மணி என்னும் இடத்தில் கூலி உயர்வு கேட்ட தாழ்த்தப்பட்ட சாதிக் கூலித் தொழிலாளர்களை குடிசைக்குள் பூட்டி வைத்து எரித்துக் கொன்றனர் உயர் சாதியினர். இதற்கு காரணமான பண்ணையாரை "அப்பாவி" என்று கூறி இந்திய நீதிமன்றம் விடுதலை செய்தது. ஆனால் அவரை கம்யுனிஸ்ட் போராளிகள் சுட்டுக் கொன்றனர். இது தான் சாதிப் போராட்டத்தின் இயல்பு. தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் தம் கன்னத்தில் அறை விழுந்த போது மறு கன்னத் தைக்காட்டாமல் அடிக்கு அடி கொடுக்கக் கற்றுக்கொண்டார்கள். இந்த மாற்றத்திற்கு காரணம் கம்யுனிஸ்ட் கட்சிகள் இப் போராட்டத்திற்கு தலைமை அளித்ததாகும்.

இலங்கையில் கம்யுனிஸ்ட் கட்சியானது இப்போராட்டத்தை ஆதரிக்கக்கூடிய உயர்சாதி மக்களின் முற்போக்கான பகுதி களை அணி திரட்டியது. இக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளையின் தலைமைத் தோழர்களில் சிலர் உயர் சாதியைச் சேர்ந்தவர்கள். இந்தப் போராட்டத்திற்கு அவர்கள் அளித்த தலைமையினால் இந்தப் போராட்டத்தின் நோக்கங்கள் சகல பகுதி மக்கள் மத்தியிலும் பரவலாயின. சிங்கள மக்கள் மத்தியிலும் தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கையை அறிமுகம் செய்ய கட்சி பெரும் நடவடிக்கை எடுத்தது. பல தேசிய தின நாளிதழ்கள் இப்போராட்டத்தைப் பற்றிய பல செய்திகளை வெளியிட்டன. சீனாவின் பீக்கிங் வானொலி அதன் ஆதரவை இதற்குத் தெரிவித்தது குறிப்பிடத்தக்கதாகும்.

தாழ்த்தப்பட்ட மக்களின் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவாக பல வடிவக் கலாச்சார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன என்பதைக் குறிப்பிடவேண்டும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அற்புதமான கவிதைகள் பாடல்கள் தோன்றின.

நூற்றுக்கு மேலான தடவை அரங்கேற்றப்பட்ட 'கந்தன் கருணை' என்னும் சிறப்பான நாடகமும் தயாரித்தளித்தார்கள். இந்து மதத்தின் படி கந்தபெருமானுக்கு இரண்டு மனைவிகள். இரண்டாவது மனைவி வள்ளி 'குறவர்' என்னும் தாழ்ந்த சாதியைச் சேர்ந்தவர். இதனால் நாரதர் கந்த பெருமானிடம் சென்று இலங்கையில் வடக்குப் பகுதியில் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மக்கள் உயர் சாதியினரால் இம்சிக்கப்படுவதாக முறையிடுவதுடன் இந்நாடகம் ஆரம்பிக்கின்றது. இதைக் கேட்ட கந்த பெருமான் கோபம் கொண்டு இதற்கு தண்டனை வழங்க பூமிக்கு வருகிறார். அவரின் பெயர் கந்தன் என்பதால் அவர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவராக இருக்கக்கூடும் என்று சந்தேகம் கொண்ட உயர்சாதியினர் அவரை முருகன் ஆலயத்தினுள் செல்ல அனுமதிக்கவில்லை. இதனால் ஆத்திரம் கொண்ட கந்த பெருமான் உயர் சாதியினர் மீது எறிவதற்காக தனது ஆயுதமாகிய 'வேல்' ஐ உயர்த்தினார். அப்போது நாரதர் இடைமறித்து 'இந்த ஆயுதத்தை மக்களிடம் கொடுங்கள்.அவர்கள் பாவிக்கட்டும்' என்று கூறுகின்றார். இந்த மாவோயிச அரசியல் தத்துவத்துடன் அந் நாடகம் முடிவடைகின்றது.



புரட்சிகர கலை எப்படி புரட்சிகர இயக்கத்தை முன்தள்ளிவிடமுடியும் என்பதற்கு இது நல்லதோர் உதாரணமாகும். புரட்சிகர நடைமுறையின்றி புரட்சிகரக்கலை பிறக்காது என்பதையும் அது தெளிவாக்கிறது. நடைமுறைதான் பிரதானமானது. ஆனால் புரட்சிகர நடைமுறையில் இருந்து தோன்றும் புரட்சிகரக் கலை புரட்சிகர இயக்கத்தை மேலும் முன்தள்ளி விட உதவுகின்றது. சூன்யத்தில் நாம் புரட்சிகரக் கலையை உருவாக்க முடியாது. புரட்சிகர இயக்கத்தின் அங்கமாக அது உருவாகின்றது. ☞



## 'TRO நிதி புலிகளின் கைகளுக்கு செல்லவில்லை'

Charity Commission

ஆறு ஆண்டுகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மீது Charity Commission மேற்கொண்ட விசாரணைகள் இவ்வாண்டு பெப்ரவரியில் முடிவுக்கு வந்துள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சில தவறுகளை விட்டிருந்த போதும் சேகரிக்கப்பட்ட நிதி புனர்வாழ்வு நடவடிக்கையிலேயே பெரும்பாலும் பயன்படுத் தப்பட்டு இருப்பதாக இவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இலங்கையில் இருந்து வெளியாகும் த ஐலண்ட் பத்திரிகை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் சேகரிக்கப்படும் நிதி வி.புலிகளின் ஆயுதக் கொள்வனவுக்குப் பயன்படுத்தப்படுவதாக வெளியிட்ட கட்டுரையைத் தொடர்ந்தே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நெருக்கடிக்கு உள்ளாகி பட்டியலில் இருந்தும் நீக்கப்பட்டது. அப்போது தமிழர் புனர்வாழ்வுக் கழக வங்கிக் கணக்கில் அண்ணளவாக £1.5 மில்லியன் பவுண்கள் வைப்பிலிருந்தது. இதே குற்றச்சாட்டு வி.புலிகளுக்கு எதிரான அணியில் உள்ளவர்களிடம் தற்போதும் உள்ளது.

இது தொடர்பாக பெப்ரவரி 26ல் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி விளக்கமளித்தது. தமிழர் புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் செல்வரட்ணம், ரட்ணசபாபதி, குகச்சந்திரன், டொக்டர் மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

மீண்டும் உடனடியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பிரித்தானியக் கிளையின் செயற்பாடு களை ஆரம்பிக்காது தொடர்ந்தும் வெண்புறா மூலம் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளதாக அங்கு தெரிவிக்கப்பட்டது.

மேலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மீதான விசாரணைகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கும் Charity Commissionக்கும் படிப்பினைகளை பெற்றுத் தந்துள்ளதாகக் குறிப்பட்ட டொக்டர் மூர்த்தி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது சுயாதீனத்தையும் தனித்தன்மையையும் பேண வேண்டியதன் அவசியத்தை ஏற்றுக் கொண்டார். கடத்தப்பட்ட புனர்வாழ்வுக் கழக உறுப்பினர்கள் பற்றி அனைவரும் தமது மனவருத்தத்தை வெளியிட்டனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இனப்பிரச்சினைக்கான தீர்வில் வட அயர்லாந்து தரும் படிப்பினைகள்

## பதிலளிக்கிறார் மாட்டின் மக்கின்னஸ்

தொகுப்பு: த ஜெயபாலன்

**கேள்வி: நீங்கள் இலங்கைக்கு விஜயம் செய்ததன் நோக்கம் என்ன?**

மா.மக்கின்னஸ்: இலங்கையில் மிகவும் மதிக்கப் படும் சமாதான அமைப்பான IMPACTன் அழைப்பை ஏற்று இலங்கை வந்தோம். நாங்கள் எங்களுடன் பேச விரும்புகிற அனைவருடனும் பேச விரும்புகிறோம். வட அயர்லாந்தில் சமாதானச் செயன்முறை எப்படி முன்னெடுக்கப்பட்டது என்ற அனுபவத்தை உங்களுக்கு வழங்க முடியும். இங்குள்ள நிலைமைகள் பற்றிய எங்கள் மதிப்பீட்டையும் தெரிவிக்க முடியும். அவர்கள் இரட்டிப்பான முயற்சியை மேற்கொள்ள வேண்டும் என நான் நினைக்கிறேன்.

நாங்கள் மேற்கொண்ட சந்திப்புகள் பயனுள்ளதாக இருந்தது. நாங்கள் தமிழ் கூட்டமைப்பினர், ஜனாதிபதி, பிரதமர், மந்திரிகள் என பல தரப்பினரையும் சந்தித்தோம்.

**கேள்வி: ஐ ஆர் ஏ யையும் சின்பெயின் னையும் எப்படி பிரிக்கிறீர்கள்?**

மா.மக்கின்னஸ்: நான் நீண்ட காலத்திற்கு முன் ஐ ஆர் ஏ யின் ஒரு உறுப்பினர். இப்போது இல்லை. பெரும்பாலான சின் பெயின் உறுப்பினர்கள் ஐ ஆர் ஏ உறுப்பினர்களாக இருக்கவில்லை. பிரித்தானிய பிரச்சாரவாதிகள் இரண்டும் ஒரே அமைப்பு என்று பிரச்சாரம் செய்தாலும் இவை இரண்டும் வெவ்வேறு அமைப்புகள். அயர்லாந்தில் சமாதானத்தை ஏற்படுத்த சின்பெயின் தலைமை தாங்கியது. நாங்கள் ஐ ஆர் ஏ யை அணுகினோம். அதன் விளைவாக அவர்கள் 1994ல் யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர். கடந்த ஆண்டு ஜெரி அடம் மீண்டும் ஐ ஆர் ஏ யை அணுகி சமாதானச் செயன்முறைக்கு மேலும் ஒத்துழைப்பு வழங்கும்படி கோரினார். ஐ ஆர் ஏ சகல ஆயுத நடவடிக்கைகளையும் கைவிடுவதற்கு சம்மதித்தது. சின்பெயின் விடுத்த வேண்டுகோளை ஐ ஆர் ஏ ஏற்று ஒத்துழைத்தது.


**கேள்வி: வட அயர்லாந்து பிரச்சினையின் இன்றைய நிலை என்ன ?**

மா.மக்கின்னஸ்: கடந்த 10 ஆண்டுகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டு உள்ளது. 1998 ஏற்பட்ட Good Friday உடன்பாட்டைத் தொடர்ந்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் நாங்கள் மிகுந்த வெற்றி பெற்றுள்ளோம். சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை இவ்வாண்டு முக்கியமானது.

கொழும்பின் வீதிகளில் நாங்கள் செல்லும் போது பொலிசாரையும் இராணுவத்தினரையும் சோதனை நிலையங்களையும் காண்கிறேன். 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்த பெல்பாஸ்ட் ஞாபகத்திற்கு வருகிறது. ஆனால் இப்போது அங்கு இப்படியிலலை.

சமாதானத்தை ஏற்படுத்த அரசியல் தலைவர்கள் சில துணிச்சலான முடிவுகளை எடுக்க வேண்டும்.

**வட அயர்லாந்து மிக நீண்ட போராட்ட வரலாற்றைக் கொண்டது. கடந்த ஒரு தசாப்த காலமாக சமாதான முயற்சிகளின் மூலமான தீர்வு ஒன்றுக்கு ஐ ஆர் ஏ, சின் பெயின், பிரித்தானிய அரசு மற்றும் அதன் சார்பானவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு உள்ளனர். ஐ ஆர் ஏ யின் இரண்டாம் தளபதியாக இருந்த மாட்டின் மக்கின்னஸ் பின்னாளில் சின் பெயினின் பாராளுமன்ற உறுப்பினரானார். வட அயர்லாந்து தொடர்பான உயர்மட்ட பேச்சுக்களில் மாட்டின் மக்கின்னஸ் சின் பெயின் சார்பாக பங்கேற்றிருந்தார். தற்போதைய பேச்சுவார்த்தைகளிலும் மாட்டின் மக்கின்னஸ் சின் பெயினின் சிரேஷ்ட பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு உள்ளார். இவர் அண்மையில் இலங்கை சென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பினரையும் அரச தரப்பினரையும் சந்தித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய சுற்று பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து இருப்பது முக்கியமான நிகழ்வு. அரசியல் வாதிகளாலேயே சமாதானத்தை கட்டியெழுப்ப முடியும்.

**கேள்வி: Bloody Sunday இல் உங்கள் பாத்திரம் என்ன? அப்போது ஐ ஆர் ஏ யின் இரண்டாவது தளபதியாகக் கலந்து கொண்ட நீங்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாலேயே இராணுவம் திருப்பிச் சுட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டதாக கூறப்படுகிறதே?**

மா.மக்கின்னஸ்: உண்மையில் அது ஒரு பெரிய இழப்பு. மக்களில் 27 பேர் சுடப்பட்டனர். 14 பேர் கொல்லப்பட்டனர். இந்நாளின் முக்கியத்துவம் என்னவென்றால் டெறியில் உள்ள மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதே. சம்பவம் நடைபெற்று சில மணிநேரங்களிலேயே பிரித்தானிய அதிகார வர்க்கம் கொல்லப்பட்ட மக்களை ஆயுததாரிகள் என்று முத்திரை குத்தியது.

அந்த கொடிய நாளில், மக்களுடைய துக்கத்திலும் வேதனையிலும் பங்கெடுக்கும் ஒருவனாக நானும் கலந்துகொண்டேன். அப்போது எனக்கு வயது 21. நான் துப்பாக்கி பிரயோகம் செய்ததற்கு எந்த ஆதாரமும் இல்லை. ஆரம்பத்தில் கொல்லப்பட்டவர்களை ஆயுததாரிகள் என்றே பாதுகாப்புப் படைகள் குறிப்பிட்டது ஞாபகமிருக்கும்.

நசனலிஸ்ட் றிபப்ளிகன் ஆதரவான நகரங்களில் உள்ள ஆதரவாளர்கள் பிரித்தானியாவுடனும் அதன் அரசாங்கத்துடனும் யூனியனிஸ்ட் ஆட்சியாளர்களுடனும் பிரித்தானிய இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படைகளுடனும் யுத்தத்தில் இருந்தனர். நான் சிவில் உரிமைகளுக்காக போராடியவர்களில் ஒருவனாகவே இருந்தேன்.

**கேள்வி: பிரித்தானியா வெளியேற வேண்டும். வட அயர்லாந்து, அயர்லாந்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று கோரித்தான் நீங்கள் ஐ ஆர் ஏ யில் இணைந்தீர்கள். அரசியலில் ஈடுபட்டீர்கள். சிலர் நீங்கள் விலை போய்விட்டதாகவும் கூறுகிறார்கள். இன்று வட அயர்லாந்தை ஆளும் பிரித்தானிய பாராளுமன்றத்தில் நீங்கள் இருக்கிறீர்கள். பிரித்தானிய அரசு இன்றும் தனது துருப்புக்களை வட அயர்லாந்தில் வைத்துள்ளது. வட அயர்லாந்து மக்கள் வாக்களிப்பதன் மூலம் மட்டுமே அயர்லாந்துடன் இணைய முடியும் என்ற உடன்படிக்கையில் கையெழுத்திட வைத்துள்ளது பிரித்தானிய அரசு.**

மா.மக்கின்னஸ்: நாங்கள் எங்கள் இலக்கை அடைவோம் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். நாங்கள் இன்று ஈடுபட்டுள்ள இந்த செயற்பாடு ஐக்கிய அயர்லாந்தை நோக்கியதாகவே அமையும்.

**கேள்வி: எப்படி ?**

மா.மக்கின்னஸ்: இந்த சமாதானச் செயற்பாடு தொடர்ந்து நடந்தால் அது சாத்தியப்படும். நாங்கள் தொடர்ந்தும் இந்த பிரிவினையை முடிவுக்கு கொண்டுவர உழைப்போம். வடக்கு தெற்குக்கு இடையேயான ஒத்துழைப்பை வலுப்படுத்துவோம். உடன்பாட்டிற்கு அமைந்த விடயங்களை அமுல்படுத்தும் ஸ்தாபனங்களை பலப்படுத்துவோம்.

**கேள்வி: யூனியனிஸ்ட்கள் உங்கள் வாதத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நினைக்கிறீர்களா ? அல்லது சிலர் சாதாரணமாகச் சொல்வது போல் இனப்பெருக்கத்தின் மூலம் நசனலிஸ்ட்கள் அதிகமாவார்கள் என நினைக்கிறீர்களா ?**

மா.மக்கின்னஸ்: இல்லை. அப்படி சாதாரணமாக நான் நினைக்கவில்லை. அதற்கும் மேலானது. ஐக்கிய அயர்லாந்து பொருளாதார அடிப்படையில் ஆரோக்கியமானது என நான் நினைக்கிறேன். பெரும்பாலான பொருளாதார நிபுணர்கள் யூனியனிஸ்ட் வர்த்தக சமூகம் உள்ளடங்கலாக, பொருளாதார ரீதியில் அயர்லாந்து பிரிந்து இருப்பது இன்றைய நவீன காலகட்டத்தில் அர்த்தமற்றது என்றே கருதுகிறார்கள். கூடுதலான யூனியனிஸ்ட் வர்த்தக சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இப்பொழுது அயர்லாந்து முழுவதற்கும் பயணிக்கிறார்கள். எதிர்காலத்தில் யூனியனிஸ்ட்கள் பலரும் தாங்கள் வடக்கில் துண்டிக்கப்பட்டிருக்க முடியாது என்பதை உணர்வார்கள். இனி இதனை கட்டி எழுப்புவதே முக்கியம்.




என் மீதான குற்றச்சாட்டை பொறுத்தவரை அதில் எனக்கு எந்த மதிப்பும் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலக் கண்ணாடி: அயர்லாந்து

**வட அயர்லாந்தில் உள்ள மக்கள் இரு பிரதான பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். பெரும்பான்மையினரான புரட்டஸ்தாந் மதத்தைப் பின்பற்றும் யூனியனிஸ்ட்கள். இவர்கள் வட அயர்லாந்து தொடர்ந்தும் பிரித்தானியாவின் பகுதியாக இருக்க வேண்டும் என்று விரும்புபவர்கள். சிறுபான்மையினரான நசனலிஸ்ட்கள் கத்தோலிக்கர்கள். இவர்கள் வட அயர்லாந்து, அயர்லாந்து குடியரசுடன் இணைய வேண்டும் என்று போராடி வருகின்றனர். கடந்த 30 ஆண்டுகளாக இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தில் 3,500 கொல்லப்பட்டனர்.**

வரலாற்றூடாக அயர்லாந்துத் தீவு தனிநாடாகவே இருந்து வந்தது. அவர்களுக்கு என்று மொழி, கலாச்சாரம், அரசியல் சமூக நிறுவனங்கள் இருந்தது.

1169ல் நோர்மன் இங்கிலாந்தில் இருந்து படையெடுத்தது முதல் அயர்லாந்து பிரித்தானியாவின் காலனியாகியது.

ஆனால் அயர்லாந்து தீவு தனி அலகாகவே நிர்வகிக்கப்பட்டு வந்தது. இந்த 800 ஆண்டு காலப்பகுதியில் அயர்லாந்து தீவு மக்கள் பிரித்தானிய ஆதிக்கத்துக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர்.

1916ல் பிரித்தானியாவுக்கு எதிரான நசனலிஸ்ட்களின் *(Nationalist)* கிளர்ச்சிகள், அரசியல் போராட்டங்களுடன் இணைந்து ஆயுத வடிவம் எடுத்தது. இப்போராட்டம் 1921 வரை நீடித்தது.

1920ல் வெஸ்ற்மினிஸ்ரர் பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் அயர்லாந்து 26 அலகுகளும் 6 அலகுகளும் கொண்ட இரு பிரிவுகளாக பிரிவினைக்கு உட்பட்டது.

1922ல் 26 அலகுகளைக் கொண்ட அயர்லாந்து தீவின் தென்பகுதி சுதந்திரம் அடைந்து பின்னர் குடியரசு ஆனது. 6 பகுதிகளைக் கொண்ட அலகு பிரித்தானிய அரசின் கீழ் தொடர்ந்து ஆளப்பட்டது.

1968ல் நசனலிஸ்ட் தமது சிவில் உரிமைகளுக்காகப் போராடினர். தேர்தலில் தமது பெரும்பான்மையை நிலைநாட்டும் விதத்தில் புரட்டஸ்ட்தாந் மதத்தினர் எல்லைகளை வரையறுத்து இருந்தனர். இவற்றை மறுசீரமைப்பதாக அம்மாநில அரசு உறுதியளித்தது.

1969 ஒகஸ்ட் 12ல் லோயலிஸ்ட்களின் *(Loyalists)* ஊர்வலம் நசனலிட்களின் பகுதிகளைக் கடந்து சென்ற போது கலவரம் ஏற்பட்டது. துருப்புக்கள் வரவழைக்கப்பட்டனர். ஐ ஆர் ஏ *(Irish Republic Army IRA)* யின் நடமாட்டங்கள் அதிகரித்தது.

1970 -1990 வரை இரு சமூகங்களிடையேயும் உள்ள ஆயுதக் குழுக்கள் தாக்குதல்களை மேற்கொண்டு உள்நாட்டு யுத்தம் ஒன்று நிகழ்ந்தது.

1971 - 1975 காலப்பகுதிகளில் 2000 பேர் வரை பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டனர்.

1972 ஜனவரி 30ல் லண்டன் டெறியில் ஊர்வலம் சென்றவர்களை துருப்புக்கள் சுட்டத்தில் ஊர்வலத்தில் சென்ற பொதுமக்கள் 14 பேர் கொல்லப்பட்டனர். இதுவே *Bloody Sunday* என குறிப்பிடப்படுகிறது.

1994 ஒகஸ்ட்டில் ஐ ஆர் ஏ யுத்த நிறுத்தத்தை அறிவித்தது. லோயலிஸ்ட்கள் அதனைத் தொடர்ந்து ஒக்ரோபரில் யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர்.

1996ல் ஜோன் மேஜர் அரசாங்கம் ஆயுத அமைப்புகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று வற்புறுத்தியதை அடுத்து ஐ ஆர் ஏ யுத்த நிறுத்தத்தை பெப்ரவரி 9ல் முடிவுக்கு கொண்டு வந்தது. கனரி வோர்பில் ஐ ஆர் ஏ குண்டுகளை வெடிக்க வைத்தது.

1997ல் ரொனி பிளேயிரன் அரசாங்கம் பேச்சு வார்த்தையினூடாக படிப்படியாக ஆயுதக் களைவுக்கு அழைப்பு விடுத்ததை அடுத்து மற்றுமொரு யுத்த நிறுத்தத்தை யூலையில் ஐ ஆர் ஏ அறிவித்தது.

1998 ஓமா குண்டு வெடிப்பில் 29 பேர் கொல்லப்பட்டனர். ஐ ஆர் ஏ யில் இருந்து பிரிந்து சென்ற ஆர் ஐ ஆர் ஏ *(Real Irish Republic Army RIRA)* அதற்கு உரிமை கோரியது.

2004 டிசம்பரில் பெல்பாஸ்ட் வங்கியில் இருந்து £26 மில்லியன் பவுண்கள் களவாடப்பட்டது.

2005 ஜனவரி 30ல் றொபேட் மக்காட்னி பெல்பாஸ்டில் கொல்லப்பட்டார். ஐ ஆர் ஏ மீது குற்றம்சாட்டப்பட்டது. பின்னர் தனது உறுப்பினர்கள் சிலரை நீக்கியதாக ஐ ஆர் ஏ அறிவித்தது.

2005 யூலையில் ஐ ஆர் ஏ தனது ஆயுத நடவடிக்கைகளைக் கைவிடுவதாக அறிவித்தது. பேச்சு வார்த்தைகள் தொடர்கின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றிபப்ளிக்கனாக எனது அரசியலையும் அயர்லாந்தின் மீளிணைப்பையும் மதிப்பிடுவதும் தீர்ப்பளிக்கும் அதிகாரமும் மக்களிடம் வாக்காளர்களிடம் விடப்பட்டு உள்ளது.

**கேள்வி: உங்கள் மரணத்துக்கு முன் ஐக்கிய அயர்லாந்து உருவாகும் என நீங்கள் நினைக்கிறீர்களா ?**

மா.மக்கின்னஸ்: நிச்சயமாக. இப்பொழுதுக்கும் உதாரணமாக 2016க்கும் இடையே அது சாத்தியமாகும் என நான் உண்மையில் நினைக்கினே. டப்லினில் இடம்பெற்ற ஈஸ்டர் ரைசிங் இன் 100வது ஆண்டு நினைவு 2016 எமது வழியிலேயே உள்ளது.


ஜெரி அடம்ஸ் – மாட்டின் மக்கின்னஸ்

ஜெரி அடமும் அவ்வாண்டு நாங்கள் நிச்சயமாக அதனைப் பார்ப்போம் என்று நம்புகிறார். அந்த ஆண்டில் நாங்கள் மிகவும்முன்னோக்கிச் செல்ல முடியும் என்று நான் நம்புகிறேன்.

இன்று நாங்கள் எங்கு நிற்கிறோம் என்பதை 10 ஆண்டுகளுக்கு முன்னுடன் ஒப்பிட்டு ஆராய்ந்தால், முற்றிலும் வேறு இடம் என்பது தெரியும். இன்னும் 5 ஆண்டுகளில் முற்றிலும் வேறான ஒரு இடத்தில் நிற்போம்.

**கேள்வி: நீங்கள் வரலாற்றோடு உங்களைப் பார்க்கச் சொல்கிறீர்கள். ஆனால் உங்கள் நடவடிக்கைகளும் உங்கள் உணர்வுகளுமே பார்க்கப்படுகிறது. ஒருவன் தனது பாதையில் செல்ல கொலைகளையும் செய்ய தயாராய் இருந்ததை அவர்களால் மறக்க முடியவில்லை.**

மா.மக்கின்னஸ்: நான் என்ன சொல்கிறேன் என்றால் அநீதி, சமத்துவமின்மை, பாரபட்சம், ஆளுகை இவற்றை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இடம்பெற்ற கிளர்ச்சியின் ஒரு அங்கமாகத்தான் நான் என்னைப் பார்க்கிறேன்.

**கேள்வி: நீங்கள் சொல்வது சொற்கள். அதனையே அவர்கள் வேறு வடிவில் சொல்கிறார்கள்.**

மா.மக்கின்னஸ்: நெல்சன் மண்டேலா இங்கு இதைச் சொல்லியிருந்தாலும், நீங்கள் இதே வாதத்தையே அவர் முன்னும் வைத்திருப்பீர்கள்.

**கேள்வி: இந்த செயல்முறையின் இருதயம் என்பது ஐ ஆர் ஏ இல் 21 வயதில் இருந்த மாட்டீன் மக்கின்னஸ் 30 ஆண்டுகளுக்குப் பின் இப்போது எவ்வளவு தூரம் மாறியுள்ளார் என்பதே?அவர் மாறியுள்ளாரா அல்லது பிரித்தானிய அரசாங்கம் அவருடன் வாழ கற்றுக்கொண்டுள்ளதா?**

மா.மக்கின்னஸ்: கடந்த 30 ஆண்டு காலத்தில் பல அம்சங்கள் மாற்றமடைந்துள்ளதாகவே நான் நினைக்கிறேன். 30 வருடங்கள் நாங்கள் பின்னுக்கு செல்ல விரும்பமாட்டோம் என்றும் நினைக்கிறேன்.

நாங்கள் முன்பு செயற்பட்டதிலும் வேறுவிதமாக இப்போது செயற்படுகிறோம். நாங்கள் ஒருவர் பேசுவதை மற்றவர் கேட்கிறோம். இன்னும் முக்கியமாக நாங்கள் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்து இந்த சமாதானச் செயற்பாடு தொடர்வதை உறுதிப்படுத்துகிறோம்.

**கேள்வி: உங்கள் கடந்த காலத்தைப் பற்றி, ஐ ஆர் ஏ நடந்துகொண்டதைப் பற்றி நீங்கள் அவமானமாகக் கருதுகிறீர்களா?**

மா.மக்கின்னஸ்: ஐ ஆர் ஏ கடந்த காலத்தில் செய்த நடவடிக்கைகள் தவறாக இருந்துள்ளது. அதனை நானும் ஜெரி அடமும் எண்ணற்ற தடவைகள் வெளிப்படுத்தி உள்ளோம்.

ஆனால் நான் அவமானப்படும் அளவுக்கு எந்த தவறையும் செய்யவில்லை. அயர்லாந்தின் சுதந்திரத்துக்கான போராட்டத்தில் நான் பங்கு பற்றியதை நான் அவமானமாகக் கருதவில்லை.

கடந்த காலங்களில் பல தவறுகள் இடம் பெற்றுள்ளது. அதற்கு பல்வேறு தரப்பினரும் பொறுப்பாளிகளாக இருந்துள்ளனர். எந்த ஒரு யுத்த நிலையிலும் இது வழக்கம். உண்மை நிலை என்னவென்றால் சமாதான செயன்முறையைத் தொடர்ந்து நிலைமை மாறியுள்ளது.

நான் என்ன நினைக்கிறேன் என்றால், கடந்த 30 ஆண்டுகளில் நாங்கள் பல துன்பியல் நிகழ்வுகளை சந்தித்துள்ளோம் என்பதை ஏற்றுக்கொண்டு முரண்பாட்டில் இருந்து உறுதியாக விலகி அயர்லாந்துக்கும் பிரித்தானியாவுக்கும் நல்ல நாட்களை உருவாக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**கேள்வி: மக்காட்னியுடைய மரணம், மரண விசாரணையையும் அதனைத் தீர்ப்பதையும் கடந்து சென்றுள்ளது. பிரித்தானிய அரசும் லோயலிஸ்டும் இதுவரை செய்ய முடியாததை மக்காட்னியுடைய சகோதரிகளின் கோபம் சாதித்துள்ளது.**

மா.மக்கின்னஸ்: வெற்றிகரமான சமாதான செயன்முறையே வட அயர்லாந்தில் உள்ள ஆயுதக் குழுக்களை முடிவுக்கு கொண்டு வரும். நாங்கள் உலகத்தில் மிகவும் வெற்றிகரமான ஒரு சமாதான செயன்முறையைப் பற்றி பேசுகிறோம் என்பதை மறந்து விடக்கூடாது. ஆம் பிரச்சினைகள் இருக்கிறது. தடைகள் இருக்கிறது. கஸ்டங்கள் இருக்கிறது. எங்களுடைய பொறுப்பு கஸ்டங்களையும் பிரச்சினைகளையும் கவனமாகக் கையாள்வது.

ஐ ஆர் ஏ யை மட்டும் எல்லாவற்றுக்கும் பொறுப் பாக்க முடியாது. ஈராக்கிலும் பார்க்க வட அயர்லாந்தில் அதிகமான பிரித்தானியனத் துருப்புக்கள் உள்ளனர். அத்துடன் பிரித்தானிய அரசுக்கு சார்பான யூனியனிஸ்ட் படைகள். அதிகாரப் பரவலாக்கத்துக்கு ஒத்துழைக்காத யூனியனிஸ்ட் கட்சி.

**கேள்வி: ஐ ஆர் ஏ யை கிரிமினல்கள் இல்லை என்று கூறுகிறீர்கள். ஆனால் மக்காட்னியை கொன்றவர்களை சுட்டுக் கொல்லப் போவதாக அவர்கள் எழுத்தில் அறிவித்தார்களே?**

மா.மக்கின்னஸ்: இந்த விடயத்தில் அவர்கள் மிகுந்த தவறிழைத்து உள்ளனர். எதுவும் அப்படி நடந்துவிடவில்லை என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

சின்பெயின் இன் பார்வையில் நாங்கள்




வன்முறையை முற்று முழுதாக நிராகரிக்கிறோம். எந்த ஒரு ஆயுதக் குழுவும் எக்காரணத்திற்காகவும் அவ்வாறான செயல்களில் ஈடுபடுவதை நாம் விரும்பவில்லை. சமாதானமான ஜனநாயகமான முறைகளே முன்னேற்றத்திற்கு ஒரே வழி.

**கேள்வி: ஐ ஆர் ஏ அடிப்பது, தண்டிப்பது போன்ற தண்டனைகளை வழங்குகிறது. சிறு குற்றம் புரிந்தவர்களை கை கூப்ப வைத்து அவற்றுக்கிடையே துப்பாக்கிச் சூடு நடத்துவது அவர்களது தண்டனை முறையாக உள்ளது. மேலும் 1996 யுத்த நிறுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டது முதல் 20 பேர் வரை ஐ ஆர் ஏ யால் கொல்லப்பட்டு உள்ளனர். இக் காடைத்தனம், கிரிமினல் செயல்களுக்கு நீங்கள் என்ன பதில் சொல்கிறீர்கள்?**

மா.மக்கின்னஸ்: ஐ ஆர் ஏ, காடையர்கள் என நான் நம்பவில்லை. வட அயர்லாந்தின் பகுதிகளில் மிகக் கடினமான சூழல் ஒன்றுள்ளது. அங்கு சட்டம் ஒழுங்கு பிரித்தானிய பொலிசாரால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. எங்கள் பேச்சு வார்த்தையில் ஒன்று நிர்வாகத்தை லண்டனில் இருந்து உள்ளூருக்கு மாற்ற வேண்டும் என்பது. அது முழுமையாகும் பட்சத்தில் இதற்கு விரைவில் தீர்வு ஏற்படும்.

இந்த முரண்பாடுகளில் இருந்து வெளியே வருவது கடினமான ஒன்று. இது இருட்டறைக்கு சென்று மின்விளக்கை போடுவது போல் இலகுவான ஒன்றல்ல. அங்கே பிரச்சினைகளும் கஸ்டங்களும் இருக்கப் போகின்றன.

ஆனால் இந்த பேச்சுவார்த்தையை இதயசுத்தியுடன் நெருங்கி அவதானிப்பவர்கள் ஐ ஆர் ஏ இந்த சமாதானத்தை விரும்புவதையும் அவர்களின் பங்களிப்பையும் நிச்சயம் அறிவார்கள். அவர் கள் பிரித்தானிய பாதுகாப்புப் படைகளை, புலனாய்வாளர்களை, மற்றும் படைகளை குறி வைக்கவில்லை. மேலும் ஆயுதங்களை ஒப்படைத்து உள்ளனர். இவை மிகப் பெரிய பங்களிப்புகள்.

இனி நாங்கள் செய்ய வேண்டியது இறுதியான வெற்றிகரமான முடிவுக்கு வர வேண்டும். அதனை அடைவோம் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**கேள்வி: சமூகத்தின் மீது திட்டமிட்ட முறையில் வன்முறையைப் பயன்படுத்துவது, துப்பாக்கிகளின் ஆட்சி, ஐ ஆர் ஏ**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**உறுப்பினர்கள் குற்றச் செயல்களில் ஈடுவோருக்கு தண்டனை வழங்குவது இவை இருக்க வேண்டும் என்கிறீர்களா?**

மா.மக்கின்னஸ்: யாராவது அப்படிச் செய்வார்களாக இருந்தால் அது முற்றிலும் தவறானது. 20 வருடமாக நான் இதைச் சொல்லி வருகிறேன். எல்லா வகையான தண்டனைகளையும் அடிப்பதையும் தாக்குவதையும் நான் வன்மையாக எதிர்த்து வந்துள்ளேன். இது எதிர்மறையான விளைவையே ஏற்படுத்தும் என நான் நினைக்கிறேன். பிரித்தானிய பொலிஸ் செயற்பாட்டை எதிர்ப்பவர்கள் அந்த மக்கள் மதிக்கத் தக்க பொலிசை உருவாக்க வேண்டும். இதுவே சமூகத்திற்குள் எழும் பிரச்சினையை சுமுகமாகத் தீர்க்க ஒரே வழி.

**கேள்வி: வட அயர்லாந்தில் சமாதானத்தை ஏற்படுத்த (துணைப்படைகளை விட்டுவிடுவோம்) ஐ ஆர் ஏ கலைக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா ?**


மா.மக்கின்னஸ்: நிச்சயமாக ஏற்றுக் கொள்கிறேன். என்னவென்றால் ஐ ஆர் ஏ யை முடிவுக்கு கொண்டு வர வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். இந்த சமாதானச் செயன்முறை மிகுந்த வெற்றியை ஏற்படுத்தி உள்ளது. நாங்கள் அரசியல் மற்றும் பாதுகாப்பு அம்சங்களை மாற்றி உள்ளோம். இன்னும் செய்ய வேண்டிய வேலைகள் உள்ளது.

**கேள்வி: சின் பெயின் னின் முக்கிய உறுப்பினராக இருக்கும் நீங்கள் இலங்கையின் இனப்பிரச்சினையை எப்படி பார்க்கிறீர்கள்?**

மா.மக்கின்னஸ்: நாங்கள் இதனை பாரதூரமான ஆபத்தான பிரச்சினையாகவே பார்க்கிறோம். ஆண்டாண்டுகளாக யுத்தத்தை நடத்துவது சாத்தியமில்லை. ஐரிஸ் பிரச்சினையை பொறுத்த வரை நாங்களும் பிரித்தானியாவும் இந்தப் பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்கலாம் என்பதை உணர்ந்தோம். ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் உண்மையில் சமாதானத்தை விரும்பினால் சண்டையை கைவிட வேண்டும். பேச்சு வார்த்தையை தொடர வேண்டும்.

எல்ரிரிஈ தலைவர்களும் அரச தரப்பு தலைமை-களும் சந்திப்பது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். சிறு விடயங்களுக்காக தொங்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை. இப் பிரச்சினைக்கு என்ன தீர்வு என்பதுவே மிக முக்கியமானது என நான் நினைக்கிறேன். விடயங்கள் அனைத்தும் புலிகள், அரசாங்கம், பொதுவானவர்கள் ஆகியோர் கலந்துரையாட வேண்டும்.

இப்பிரச்சினை எப்படித் தீர்க்கப்பட வேண்டும் என்ற நகலை வழங்குவது எம்மால் முடியாது. இப்பேச்சுவார்த்தையை முன்நோக்கி நகர்த்துவது உங்களுடைய பொறுப்பு. அயர்லாந்துப் பிரச்சினையை தீர்க்க நாம் பெற்ற அனுபவத்தை நாங்கள் உங்களுக்கு வழங்க முடியும்.




**கேள்வி: இலங்கையின் இந்தப்பிரச்சினைக்கு பிரித்தானிய காலனியாதிக்கம் காரணம் என நினைக்கிறீர்களா?**

மா.மக்கின்னஸ்: நிச்சயமாக. சாம்ராஜ்ய பின்னணி பல நாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. ஆனால் அதே நேரம் நாங்கள் கடந்த காலத்தில் வாழ முடியாது. உலகின் பல பாகங்களில் முரண்பாடுகளுக்கு நாங்கள் பரம்பரை பரம்பரையாக பிரித்தானியர்களை குற்றம்சாட்டி வருகிறோம். மக்களுக்கு நல்ல எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதிகளின் பொறுப்பு. இலங்கை மக்களுக்கு புதிய பேச்சுவார்த்தைகள் நம்பிக்கையை ஏற்படுத்தும் என்று நம்புகிறேன். அரசியல் தலைவர்களின் பொறுப்பு என்னவென்றால் பிரச்சினைகளை நேர்மையுடன் அணுகி விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டு தீர்வைக் காண வேண்டும்.

**கேள்வி: இலங்கை இனப்பிரச்சினையில் ஆயுதப் போராட்டம் பற்றிய உங்களின் நிலைப்பாடு என்ன?**

மா.மக்கின்னஸ்: எல்லோருமே காயப்பட்டு உள்ளார்கள். சரி, பிழை என்று தீர்ப்பளிப்பது எங்களுடைய பொறுப்பல்ல. எங்களுடைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# முஸ்லீம் எழுத்தாளன்



ரி பூலோகலிங்கம்

இலண்டனில் தேசம் சஞ்சிகையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இளைய அப்துல்லாவின் துப்பாக்கிகளின் காலம் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்விலே மொழி மற்றும் மதங்களுக்கிடையிலான சிறு முறுகல் தொனிப்பு அவதானிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமாக எனது கருத்துக்களை இங்கு எழுத விரும்புகின்றேன்.

இளைய அப்துல்லா எனப்படுகின்ற எம். என். எம். அனஸ் ஒரு முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த எழுத்தாளராய் இருந்தும் அவரால் எழுதப்பட்ட சிறுகதைகளின் தொகுப்பில் தனது சொந்த மதம் சார்பான நிலையில் அன்றி எந்த மதச்சார்பு மற்ற நிலையில் ஒரு பொது மனிதனாகவே நின்று அனைத்துக் கதைகளும் எழுதப்பட்டிருந்தன.

ஆனால் இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கி இருந்த ஓட்டமாவடி அரபாத், விழாத் தலைவர் பஸீர் நூலின் விமர்சகர் பாரூக் ஆகியோர் அனஸ் முஸ்லீம்களுக்காகவே எழுத வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

உண்மையில் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்த ஒருவரான அனஸ் மாற்று மதத்தவர்களான இந்து மற்றும் கிறிஸ்தவர்களால் மிகவும் அன்பாகவும் சகோதரத்துவத்துடனும் நேசிக்கப்படுகின்ற நிலையைக்கண்டு, தமது சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறான ஒரு இயல்பான பொது மனிதனாக வாழ்கிறானே, அனைத்துத் தமிழர்களாலும் நேசிக்கப்படுகின்றானே என்றெல்லாம் சந்தோசமாகப் பெருமைப்படுவதை விட்டுவிட்டு முஸ்லீம்களுக்காகவே எழுதுங்கள் என்று அறைகூவல் விடுப்பது, அந்தப் பாரிய விழுதுகளுடன் தழைத்து ஓங்குகின்ற அனஸ் அவர்களை ஒரு குறுகிய வட்டத்துக்குள் வீழ்த்தி, வாழ்விழக்கச் செய்யும் முயற்சியாகும். குறுகிய கண்ணோட்டமுற்றதாகவும் குறிப்பிட்ட கருத்துரையாளர்களின் கடும்போக்கான தன்மையும் தான் இது வெளிக்காட்டி நிற்கின்றது.



சையட் பசீர் தலைமையில் இடம்பெற்ற எம் என் எம் அனஸின் துப்பாக்கிகளின் காலம் நூல் வெளியீட்டு விழாவில் விமல் குழந்தை வேல் உரையாற்றுகிறார்.

உண்மையில் கணிசமான அளவில் இந்து மற்றும் கிறிஸ்தவர்களான தமிழர்களிடம் சிறிதளவிலாவது முஸ்லீம்களுக்கு எதிரான உணர்வுகள் உண்டென்பதை நான் என்னைப் பொறுத்தவரை ஏற்றுக்கொள்கின்றேன். இருப்பினும் தமிழர்கள் அனஸைத் தங்கள் வீட்டுப் பிள்ளையாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது என்னையும் புளங்காகித மடையச் செய்கிறது.

மேலும் அனஸ் அவர்கள் தனது சிறுகதை ஒன்றில் இந்து சமயக் குருக்கள் ஓதும் சம்ஸ்கிருத சுலோகம் ஒன்றையும் எழுதியிருந்தார். இந்த உச்சாடனம் சம்பந்தமாகத் பஸீர் குறிப்பிட்டு

---

கடமை என்னவென்றால் எங்கள் சூழ்நிலை அனுபவங்களில்இருந்து அங்குகற்றுக்கொண்டதை இங்கு வந்து விளக்குவது. எங்கள் அனைத்து நடைமுறைகளும் அல்ல சில இங்கு பொருத்தமாக இருக்கும்.

**கேள்வி: பேச்சுவார்த்தை அனுசரணையாளர்களாக நோர்வேயின் செயற்பாட்டை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

மா.மக்கின்னஸ்: அனுசரணை என்பது மிக முக்கியமானது. இரு தரப்பும் அனுசரணையாளர்களை நம்ப வேண்டும். எங்களுக்கு அமெரிக்காவும் பின்லாந்தும் அனுசரணையாளராக இருந்தனர். அவர்களுடைய பங்களிப்பு கனியாகும் என சம்பந்தப்பட்டவர்கள் நம்பிக்கை கொண்டால் அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்பது பிரச்சினையில்லை.

**நன்றி திரு மக்கின்னஸ்.**

மக்கின்னஸ்: நன்றி.

Sources:
Timeline: Northern ireland : By Sean Clarke
30th anniversary weekend of the Bloody Sunday riots in Londonderry - BBC 2nd of Feb 2002
Pressure mounts on Sinn Fein, IRA By Tony Jones
Daily Mail: Sri Lanka



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாராவது தமிழ் எழுத்தாளர்கள் முஸ்லீம் மத வழிபாட்டு உச்சாடனங்களை எழுதுவதில்லையே என விரக்தியுடன் கேள்வியை எழுப்பியிருந்தார். விதிவிலக்குகள் இருப்பினும் இந்தக் கருத்து உண்மையானது தான். ஆனால் அதற்கான காரணம் ஸ்தூலமானது. இந்து மதம் எல்லோருக்கும் திறந்து விடப்பட்டிருக்கும் மதம். யாவரும் வரலாம். யாவரும் போகலாம். யாரும் விருந்தினர்களாகவும் வரலாம். விளையாட்டாகவும் வரலாம். அனஸ் ஏதோ வழியில் வந்திருக்கிறார் எழுதியிருக்கிறார்.

ஆனால் முஸ்லீம் மதத்தில் கட்டுப்பாடுகள் கடினமா னவை. இறுக்கி மூடி வைத்திருக்கிறீர்கள். எட்டிப்பார்க்க முடியவில்லை. ஏனைய மதத்தினரால் எதையும் துணிந்து எழுதிவிடவும் முடியவில்லை. இந்நிலையை இலகுவாய் புரிந்துகொள்ளுங்கள்.

தயவுசெய்து தப்பாக என்னைப் புரிந்து கொள்ளாதீர்கள். தங்கள் மதக்கட்டுப்பாடுகளை நான் தவறாகக் கருதவில்லை. அது உங்கள் கலாச்சாரம். என்னுடைய கலாச்சாரத்தை நான் மதிப்பது போல தங்கள் கலாச்சாரத்தை நீங்கள் மதிக்க வேண்டும் என்பதுதான் என் அவாவும் கூட. அதை நீங்கள் நம்மைவிட உயர்வாகவே செய்கின்றீர்கள் என்பதும் மறுக்கமுடியாத உண்மை.

ஏனோ தெரியவில்லை முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களை முஸ்லீம் எழுத்தாளர்கள் என்கின்றீர்கள். இந்து மற்றும் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களைத் தமிழ் எழுத்தாளர்கள் என்கின்றீர்கள். எனக்குப் புரியவில்லை. இலங்கையில் முஸ்லீம் எழுத்தாளர்கள் என்ன மொழியில் எழுதுகிறார்கள்? இருந்தாலும் உங்கள் விருப்பப்படியே இதன் தலைப்பையும் உங்கள் திருப்திக்காக முஸ்லிம் எழுத்தாளன் என்றே வைத்துவிட்டேன்.

ஒன்று சொல்வேன். முஸ்லீம் மதத்தைச் சேர்ந்த தமிழ் எழத்தாளர்கள் அதிகம். நாம் அவர்களின் எழுத்துக்களைப் படிக்கின்றோம். சந்தோசமாகப் படிக்கின்றோம். நாம் அவர்களை நேசிக்கின்றோம். அவர்களது. எழுத்துக்களை தமிழ் எழுத்தாளர்களாய் நேசிக்கின்றோம். சந்தோசமாய் வரவேற்கின்றோம்.

மேலும், துப்பாக்கிகளின் காலம் நூலாசிரியர் அனஸ்எப்படி ஒருபொது மனிதனாக மதச்சார்பின்றி தலையெடுத்தார் என்பதற்கான காரணமாக அமைந்த அவரது இளம் பராயத்து வாழ்வியல் சூழ்நிலையை என்னால் உணர முடிகின்றது. ஏனைய மதத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் வாழும் சூழலில் அனஸ் வாழ்ந்திருக்கிறார். மாற்று மதச் சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடியிருக்கிறார். படித்திருக்கிறார். ஆடிப்பாடி இருக்கின்றார். அதனால் இனம், மதம் கடந்து அனைத்து மனிதர்களையும் நேசிக்கக் கற்றிருக்கின்றார். என் மதத்தைச் சேர்ந்தவர்கள் அவருடன் இணைந்து இயைந்து பழகியிருக்கிறார்கள் என்பது எனக்குப் பெருமையாக இருக்கின்றது. அதேவேளை, உங்கள் மதத்தைச் சேர்ந்த ஒருவர் இணைந்து இயைந்து பழகியது உங்களுக்கோ பொறாமையாக இருக்கின்றது. ஏன் இப்படியெல்லாம் சிந்திக் கிறீர்கள். ஏன் எம்முடன் இணைய முடியவில்லை.

எமது தமிழ்ச்சமூகத்திலே முஸ்லீம்சமுதாயத்தின ருக்கு எதிராக பாரிய தீங்கிழைக்கப்பட்டது என்பது உண்மை தான். அந்த வரலாற்றுத் தவறைப் புரிந்தவர்கள் தமிழர்களான எங்களை மாத்திரம் வாழவைத்து விட்டார்களா என்ன? மேலும் இன்று வடக்கில் வாழும் தமிழர்களும் சூழ்நிலைக் கைதிகளாகத்தானே வாழ்கின்றார்கள். உங்களுக்கு எதிரான தவறு ஒரு கூட்டத்தினர் செய்த தவறு. அவர்கள் ஒட்டு மொத்தமான தமிழர்களுக்கும் தவறிழைப்பவர்கள் தான்.

எனவே வேற்றுமையை மறந்துவிடுங்கள். உங்களோடு இணைந்து, இயைந்து செயற்பட விரும்பும் எங்களை ஏற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் விரும்பும்போது ஏற்றுக் கொள்ளுங்கள். காத்திருக்கிறோம் நீங்கள் விரும்பும் வரை.

மேலும் ஒன்று சொல்வேன். மக்களுக்கிடையில் பிரிவுகள் ஆங்காங்கே அதிகமாக இருக்கின்றன. தமிழர்களுக்கிடையே பெண்கள் ஒடுக்குமுறை, சாதிய ஒடுக்குமுறை, பிரதேசப் பிரிவினைவாதம் மற்றும் அந்தஸ்துகளுக்கிடையிலான ஒடுக்குமுறைகள் எல்லாம் தாராளமாய் இருக்கின்றன. இவை அனைத்தும் தகர்க்கப்படுவதற்கான வழிவகைகள் கண்டறியப்பட்டு இல்லாதொழிப்போம் என எவ்வாறு நம்புகின்றோமோ, அதேவழியில் தமிழ், முஸ்லீம்களுக்கிடையிலான வேறுபாடுகளையும் முறுகல் உணர்வுகளையும் தகர்த்தெறிய முடியும் என்பது வெளிச்சமான விடயம். எனவே நாம் மதங்களுக்கிடையில் மனக்கிலேசமின்றி கை கோர்ப்போம். குறுகியவாதப் போக்குகளைக் கைவிட்டு மானிடநேயம் எனும் உயர்நோக்கிற்காக ஒன்றிணைவோம். அதுவே சமூக வளர்ச்சிக்கான சாத்தியப்பாடுகளை ஏற்படுத்தும். கைகோர்ப்பதன் மூலமே வாழ்வின் உயர் விழுமியங்களை அடையமுடியும். மனித நேயமே வாழ்வின் உயர் ஸ்தானத்திற்கு எடுத்துச் செல்லும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்காவிடம் சோரம் போகும் இந்தியா

எஸ் வேலு

தன் அதிதீவிர விசுவாசிகள் தெற்காசியப் பகுதிகளில் அதிகாரத்திற்கு வந்ததையோ அல்லது வர வைக்கப் பட்டதையோ குறித்து அமெரிக்கா உற்சாகம் அடைந்து உள்ளதுடன், தனது அரசியல் நகர்த்தல்களையும் வெகுவாக ஆரம்பித்துள்ளது.

அமெரிக்காவின் யூனோகால் நிறுவனத்தின் முன்னாள் அதிகாரிதான் தற்போது ஆப்கானிஸ்தானின் அதிபராக இருக்கும் ஹமித்கர்சாய் என்பதும், முன்னாள் உலக வங்கியின் அதிகாரியான மன்மோகன்சிங் தான் இன்று இந்தியப் பிரதமர் என்பதும், இவர்களின் அரசியல் வருகையின் பின்னணி என்பது தற்செயல் நிகழ்வுகள் அல்ல என்பதும் குறிப்பிடப்பட வேண்டியதாய் உள்ளது.

மேலும் இந்திய ஆட்சியாளர்களில் காங்கிரசும், மதவெறி பிடித்த பாரதீய ஜனதாவும் எப்பொழுதுமே அமெரிக்க விசுவாசிகளாக இருந்து வந்துள்ளார்கள். கடந்த ஜூலை மாதம் அமெரிக்காவுக்குச் சென்ற இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு பட்டுக்கம்பள (செங்கம்பள) வரவேற்புஅளித்துவரவேற்றுள்ளதுபுஸ்நிர்வாகம். இரு நாடுகளுக்கும் இடையே பாதுகாப்பு, இராணுவம், அணுவிசை மற்றும் வர்த்தகம் தொடர்பான உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. இதற்கு எதிராக பலமான எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன.

இவற்றில் இராணுவம் தொடர்பான உடன்படிக்கையில், அமெரிக்கா-இந்திய கூட்டு இராணுவ நடவடிக்கையும், அமெரிக்கா 'ஜனநாயகத்தை' மேற்கொள்ள எடுக்கும் நடவடிக்கைகளில் இராணுவ ஒத்துழைப்பையும் இந்தியா வழங்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் இதுபோன்ற ஜனநாயக பயங்கரவாதத்திற்குத் தான் இந்தியா இனி துணை நிற்கப் போவதாக உறுதி பூண்டிருக்கின்றது.

1992ல் நரசிம்மராவ் ஆட்சியில் இருந்த போது இந்திய - அமெரிக்க 'இராணுவ நிர்வாக வழிகாட்டும் குழு' அமைக்கப்பட்டது. இதன் அடிப்படையில் 1992 இரு நாட்டு கப்பற் படைகளும் கூட்டாக பயிற்சியில் ஈடுபட்டன. 1994ல் இரு நாட்டு விமானப்படைகளும் கூட்டப் பயிற்சியில் இறங்கியது. 1995ல் நரசிம்மராவ் அரசு இந்திய - அமெரிக்க இராணுவ ஒத்தழைப்பு உடன்பாட்டில் கையெழுத்திட்டது.

இதற்குப் பிந்தைய பிஜேபி அரசும் இராணுவ ஒத்துழைப்பை முக்கிய கேந்திரக் கூட்டணியென பிரகடணம் செய்தது. அமெரிக்காவின் உலகளாவிய யுத்த கொள்கைகளை இந்தியாவின் நடைமுறை இராணுவ கொள்கைகளாக மாற்றுவதற்காக 2001ல் 'பாதுகாப்பு கொள்கைக் குழு' (Defence Policy Group) அமைக்கப்பட்டது. இந்தக் காலத்தில் தான் அமெரிக்காவின் உளவு அமைப்பான எப்.பி.ஐ அலுவலகம் புதுடில்லியில் அமைக்கப்பட்டது. புஸ் அறிவித்த ஏவுகணை பாதுகாப்புத் திட்டத்தை இந்தியா ஆதரித்ததுடன் 'மலாக்கா ஜலசந்தி' வழியாக சென்ற அமெரிக்க கப்பல்களுக்கு இந்திய கப்பல்படை பாதுகாப்பளிக்க ஒப்புக்கொண்டது. 'மலாக்கா ஜலசந்தி' பாதுகாப்பில் அந்த கடல் பகுதி நாடுகள் மட்டுமல்லாமல் பிறநாடுகளின் கடற்படைகளும் அனுமதிக்கப்பட வேண்டும் என்று ஆசிய பாதுகாப்பு மாநாட்டில் ரம்ஸ்பீல்ட் கூறினார்.

'மலாக்கா ஜலசந்தி'யைச் சேர்ந்த மலேசியா, இந்தோனேசியா, நாடுகளின் சம்மதமும் பங்குகொள்ளுதலும் இல்லாமல் இந்திய கடல் பிராந்தியத்தில் இந்திய கடற்படை, அமெரிக்க கடற்படையுடன் கடல்கொள்ளைக்கு எதிரான




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டுப் பாதுகாப்பு ரோந்து நடவடிக்கையில் ஈடு பட்டதை மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா ஆகிய நாடுகள் கடுமையாக எதிர்த்தன.

மலேசிய துணைப் பிரதமர் நஜீப் ரசாக் "எங்களது பிராந்தியக் கடல்வழிப் பாதுகாப்புக்கு வேறு நாட்டுக் கடற்படைகளை அனுமதிக்க முடியாது. அத்துடன் இந்தக் கடல்வழிப் பாதையின் பாதுகாப்பை கடற் பகுதியில் அமைந்துள்ள நாடுகளே (மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேசியா) பாதுகாக்கும்" என வலியுறுத்தி உள்ளார்.




2002ல் அமெரிக்க இராணுவத்தின் உளவுப் பிரிவு - இந்திய அமெரிக்க உறவு சில எதிர் பார்ப்புகளும் தொலை நோக்குகளும் - என்ற அறிக்கையை தயாரித்து இருக்கிறது. இந்த அறிக்கையில் இந்தியாவிடம் அமெரிக்கா என்ன எதிர்பார்க்கிறது என்பது தெளிவாக சுட்டிக்காட்டப்படுகிறது. அமெரிக்காவின் ராணவ நோக்கங்களை செயற்படுத்த ஒரு வேலைப் பிரிவினைக்கு எற்பாடு செய்யப்பட்டு உள்ளது. இதன்படி நேரடி இராணுவ நடவடிக்கைகளை - ஆக்கிரமிப்புகளை அமெரிக்க ராணுவம் தானே முன்னின்று நடத்தும். உலக அளவில் செய்யப்பட வேண்டிய சிறு சிறு வேலைகள் இருக்கின்றன.

- அரசியல் ஸ்தீரணம் இல்லாத நாடுகளில் அமைதிகாக்கும் நடவடிக்கைகள்
- அதிக மதிப்புள்ள பொருட்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு பாதுகாப்புக் கவசமாகச் செயற்படல்
- அணு ஆயுதங்கள் கடத்திச் செல்லப்படுகின்றனவா என்று கப்பல்களை வழிமறித்துச் சோதனை இடுதல்
- கடல்வழிப் பாதுகாப்பு

இத்தகைய வேலைகளைச் செய்வதற்கு ஆசிய பிராந்தியத்தில் திறமை வாய்ந்த ஆயுதக் கூட்டாளி தான் இந்தியா என இந்த அவணத்தில் தெளி வாக கூறப்படுகிறது. மேலும் ஆக்கிரமிப்புப் போர் நடத்திய ஒரு நாட்டைப் பிடித்து பின் அங்கு நிலை கொள்வத்றகாக அமைதிகாக்கும் பணி, தேடுதல் பணி என்கின்ற பெயரில் மேற்கொள்ளப்படும் பொலிஸ் வேலைகளை இந்திய படைகளிடம் விடும் நோக்கமும் இதில் உண்டு. (தற்போது ஈராக்கில் மருத்துவப் பணிகளில் இந்திய இராணு வம் ஈடபட்டு வருவதை கருத்தில் கொள்ளவும்.)

அமெரிக்காவுடன் இராணுவக் கூட்டு வைத்துக் கொள்ளும் நாட்டில் அமெரிக்க படைப்பிரிவு இருத்தல், கூட்டுத் திட்டமிடல், அதீத இராணுவ உதவி இவையனைத்தும் கூட்டுச்சேரும் நாட்டின் நாட்டின் இராணுவ உள்விவகாரங்களில் தலை யீட்டிற்கு உத்தரவாதம் செய்கிறதென்று அமெரிக்க செனெட் வெளியுறவு கமிட்டியின் 1970ம் ஆண்டு அறிக்கை குறிப்பிடுகிறது.

மன்மோகன் சிங் - புஸ் கூட்டறிக்கையில் இருவரும் உலகம் முழுவதும் ஜனநாயகத்தை மேம்படுத்தவும் பயங்கரவாதத்திற்கு எதிராகவும் இணைந்து செயலாற்றப் போவதாகவும் கூறி உள்ளனர். 'உலகளாவிய ஜனநாயகத்திற்கான முன் முயற்சி' என்கிற திட்டத்தை அறிவித்த உள்ளனர். மேற்கு ஆசிய மற்றும் மத்திய ஆசி யாவில் மூலப் பொருட்கள் வளமுள்ள நாடுக ளில் ஜனநாயகம் என்ற போர்வையில் பொம்மை அரசகளை திணிக்க முயல்கின்றனர்.

அமெரிக்காவின் மேற்பார்வையில் நடை பெற்ற ஜனநாயகத்தில் ஜோர்ஜியாவிலும் உக்ரெயினிலும் அதனது அடிவருடிகள் ஆட்சி யில் அமர்த்தப்பட்டு உள்ளனர். இது போலவே ஈராக் தேர்தலும் (எந்த தேர்தல் கண்காணிப் பாளர்களையும் அமெரிக்க அனுமதிக்கவில்லை.) அதனது ஏஜெண்டுகளை வெளிப்படையாகவே அமர்த்தியுள்ளது. அப்கானிலும் இந்நிலைதான். தேர்தல் தில்லுமுல்லுகள் பகிரங்கமாக வெளியிடப் பட்ட பின்பும் ஜன நாயகத்தின் பாதுகாவலர்கள் அதைப் பற்றி பேச மறுக்கின்றனர்.

இத்தகைய கைப்பாவைகளின் ஆட்சியை அமைக்கும் ஜனநாயகத்திற்குத் தான் இனி இந்தியாவும் அடியாளாகப் பயன்படப்போகிறது.

## அமெரிக்காவிடம் சரணாகதி

ஐ.நாவில் அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பு நாடு அந்தஸ்தைப் பெறுவதற்கு, இந்தியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கொண்ட நடவடிக்கைகள் தோல்வியைத் தழுவிய நிலையில், அமெரிக்காவிடம்சரணாகதி அடைந்துள்ளதாகவே கருதப்படுகின்றது. இந்நிலையில் எதையும் விட்டுக் கொடுக்கவும் தயாராக உள்ளது. இதுகாலம் வரை தனது அணுஉலை செயற்பாடுகளை பாதுகாத்துவந்த இந்தியா, இனி சர்வதேச அணுசக்தி ஏஜென்சி (International Atomic Energy Agency) அவற்றைப் பார்வையிட அனுமதி வழங்கி உள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இதுகாலம் வரை IAEAயை அணு உலைகளைப் பார்வையிட இந்தியா அனுமதிக்க மறுத்து வந்துள்ளது. இனி இறையாண்மையை விட்டுக் கொடுக்கவும் அது தயாராக இருக்கின்றது.

அணு உலைகளுக்குத் தேவையான எரிபொருளை அமெரிக்காவிடம் இருந்து பெறவும் ஒப்பந்தம் கைச்சாத்திட்டுள்ளது. இதுகாலம் வரை அணு உலைகளுக்குப் பயன்படுத்தப்படும் யுரேனியத்தை இந்தியாவிற்கு விற்க அமெரிக்கா தடை விதித்திருந்தது. இந்தத் தடையை நீக்கியதற்கு அமெரிக்காவின் செனட் சபையின் வெளியுறவுக் கமிட்டி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இருப்பினும், இந்தியாவை அணுவிசை நிபந்தனையை ஏற்றுக்கொள்ள நிர்ப்பந்திக்கும் வகையில் அமெரிக்காவின் செயற்பாடுகள் இருக்கும் என அமெரிக்க வெளியுறவுச் செயலர் (அரசியல் விவகாரங்கள்) நிகோலஸ் பரன்ஸ் அறிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது.

## துரோகத்திற்குத் துணைபோதல்

ஈரான் தனது நீண்டகால செயற்திட்டத்தின் ஒரு பகுதியாக அணு உலை செயற்திட்டத்தைத் தொடங்கி அதன் வாயிலாக 6000 மெகாவாட் மின்சார உற்பத்தியை 2020ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய இலக்காகக் கொண்டு செயற்படத் தொடங்கியது.

ஈரானின் இந்த அதிவேக வளர்ச்சியைப் பொறுக்க முடியாமல் வழக்கம் போல அமெரிக்கா தனது உளவு நிறுவன வாயிலாக எடுக்கப்பட்ட செயற்கைக் கோள் புகைப்பட ஆதாரத்தைக் காட்டி ஈரான் அணு ஆயுதத்தைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டு வருவதாகவும், அதற்கான செயற்திட்டம் பாக்கிஸ்தான் விஞ்ஞானிகளிடம் இருந்து பெறப்பட்டதாகவும் குற்றம் சாட்டியுள்ளது.

அணு ஆயத பரவல் தடைச் சட்டத்தில் கையெழுத்திட்டுள்ள ஈரான், தனது அணு உலை செயற்திட்டப் பணிகளை ஆய்வுசெய்ய சர்வதேசிய அணுசக்தி முகாமைக்கு (IAEA) தடை ஏற்படுத்தியதில்லை. அணுசக்தி முகாமையும் பல்வேறு காலங்களில் ஈரானின் அணுவிசை செயற்பாடுகளை ஆய்வு செய்தபின் எந்தவிதமான சட்டவிரோத ஆயதங்களைத் தயாரிக்கும் பணியிலும் ஈரான் ஈடுபட்டதில்லை எனக் கூறியுள்ளதுடன், ஈரான் சமர்ப்பித்த ஆவணங்கள் திருப்தியளிப்பதாகவும் கூறியுள்ளது.

இருப்பினும், இந்த அணுஉலை விவகாரத்தை அணுஆயதத் தயாரிப்புக்கு என்றே அமெரிக்காவுடன், EU3 (பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மன்) நாடுகளும் தொடர்ந்து பிரச்சினையை கிளப்பி வருகின்றன. இதன் வாயிலாக சர்வதேச அணுசக்தி ஏஜென்சி மூலமாக ஈரானைத் தனிமைப்படுத்தி, இப்பிரச்சினை ஐ.நாவுக்கு கொண்டு செல்வதன் மூலம், ஈரான் மீது பொருளாதாரத் தடையை விதிக்க முடியும் என்பதால் இப்பிரச்சினையை ஐ.நாவுக்கு கொண்டு செல்ல அமெரிக்க, EU3 நாடுகளும் IAEAவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றன.

வியன்னாவில் நடைபெற்றசர்வதேசஅணுசக்தி முகாமையின் (IAEA) ஆட்சிக்குழுக் கூட்டத்தில் 'ஈரான் அணு ஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்தை மீறி, யுரேனியச் செறிவூட்டலில் ஈடுபடுகின்றது. அது அணு ஆயுதப் பரவலுக்கு வழிவகுக்கும்' என்று குற்றம் சாட்டி, இந்த விவகாரத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் ஆய்வுக்கு அனுப்புவது குறித்து நடந்த விவாதத்தில் இந்தியா ஈரானுக்கு எதிராக அளித்த வாக்கு அதிர்ச்சியை அளித்துள்ளது. பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்று கடைசி நிமிடம் வரை ஈரானுக்கு உறுதி அளித்துவந்த இந்தியா, ஈரானுக்கு எதிராக வாக்களித்து ஈரானின் முதுகில் குத்தி நம்பிக்கைத் துரோகம் இழைத்துள்ளது.

ரஸ்யா, சீனா, தென்னாபிரிக்கா, பாக்கிஸ்தான் போன்ற நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. வெனிசுலா மற்றும் கியுபா ஈரானுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.


1974இல் அணுசக்தி திறனைப்பெற்ற இந்தியா, பலமுறை அணுகுண்டு வெடிப்பு சோதனையில் ஈடுபட்டுள்ளதுடன் அணு ஆயுதப் பரவல் சட்டத்தில் இன்றுவரை கையெழுத்திட்டதில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வாறு இதன் நடவடிக்கைகள் இருக்க, ஈரானுக்கு எதிராக இந்தியா செயல்பட்ட விதம் இந்தியாவின் சுதந்திரமான வெளியுறவுக் கொள்கை என்பது அம்பலப்பட்டுப் போய், அமெரிக்காவின் எடுபிடியாகவும், அதனைச் சந்தோஸப்படுத்தக் கூடியதாகவும் தன்னை வெளிக் காட்டியுள்ளது. அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பை நிறுவிய இந்தியா, இன்று தன் அடிப்படை கொள்கைகளுக்கு எதிராக நடந்து கொண்டு உள்ளதுடன், இனி அக்கூட்டமைப்பு உடைந்து போகும் வாய்ப்பையும் ஏற்படுத்தி உள்ளது.




உலகவங்கியின் செயல்திட்டத்தை அப்படியே இந்தியாவின் பட்ஜெட்டில் சமர்ப்பித்த போது இந்த பொருளாதார நிபுணரின் முகத்திரை அம்பலப்பட்டுப் போனது. மேலும் இன்று பன்னாட்டு நிறுவனங்களின் தங்குதடையற்ற சுதந்திரமான 'கொள் ளைக்குத்' தனது கதவை புதிய வர்த்தக ஒப்பந்தம் மூலம் திறந்து வைத்துள்ளார் பிரதமர் மன்மோகன் சிங். இவரது வெளியுறவுக் கொள்கைகள் இந்தியா மீண்டும் விற்பனைக்குத் தயாராகவே இருப்பதை நிரூபிப்பதாகவே உள்ளன. ☞

5ம் பக்கத் தொடர்ச்சி: தமிழ் - சிங்கள பேரினவாதம்

முற்றிலுமாகும். இந்த மீள் கட்டுமானக் கட்டமைப்பில் இலங்கைச் சோனகர் சேர்க்கப்படவில்லை. சேர்க்கப்படவேண்டும் என்று விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுக்கவும் இல்லை. விடுதலைப் புலிகளால் சிங்களவர்களுக்குக் கொடுக்கப்பட்ட மரியாதை, சக மொழிபேசும் பாதிக்கப்பட்ட இன்னொரு இனத்துக்குக் கொடுக்கப்படவில்லை. இதைவிட ஆத்திரமூட்டும் செயலாக திரு சு.ப.தமிழ்ச்செல்வனின் அறிக்கை அமைந்திருந்தது. "மீள் கட்டுமான அமைப்பில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் தொடர்பாக அவர்கள் அரசாங்கத்துடன் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும்" என்பதே அவரது கூற்று.

அண்மையில் ஒரு ஐரோப்பிய இலவச தமிழ் பத்திரிகையொன்று கீழ்க்கண்டவாறு அங்கலாய்த்துக் கொண்டது. "அதிகாரம் அற்ற இந்த சுனாமி மீள்கட்டுமான அமைப்பை விடுதலைப் புலிகளிடம் தர இழுத்தடிக்கும் இலங்கை இனவாத அரசு எப்படி எமது சுயநிர்ணய உரிமை பற்றிச் சிந்திக்கும்?" என்று அது அங்கலாய்த்திருந்தது. இதே கேள்வியை இலங்கை சோனகர் விடுதலைப் புலிகளிடம் கேட்டால் அவர்களிடமிருந்து என்ன பதிலை எதிர்பார்க்கலாம்?

இந்த சுனாமி மீள்கட்டமைப்பு விடயம் மிக இலகுவான ஆனால் சிக்கலாக்கப்பட்ட ஒரு விடயம் என்பதை நியாய சிந்தையுள்ள எவரும் உணர்ந்துகொள்வர்.

இலங்கை அரசு வேண்டுமென்றே இலங்கை சோனகரை புறந்தள்ளி, அவர்களின் மூலமாகவே இந்த முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து, விடுதலைப் புலிகளை இலாவகமாக வெளித்தள்ள அல்லது விடயத்தை இழுத்தடிக்க முயற்சித்தது. விடுதலைப் புலிகள் இதை மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டு, வெளிநாடுகளின் அழுத்தத்தை இலங்கை அரசுக்குக் கொடுப்பதன் மூலம் இந்த மீள் கட்டுமான அமைப்பில் தன்னைச் சம பங்காளியாக்கி அது சாத்தியமாகும் பட்சத்தில் ISGAஇற்கான தனது ஒத்திகை நிர்வாகத்தை இதனூடாக வெளிப்படுத்தத் திட்டமிட்டிருந்தது. ஆனால் அவர்களின் ராஜதந்திரத்தில் சிக்கல் ஏற்பட்டுவிட்டது.

இலங்கை சோனகர் கோரிக்கை விடாமலேயே, அவர்களையும் பங்காளிகளாக்கும்படி இலங்கை அரசுக்கும் வெளிநாட்டுச் சக்திகளுக்கும் விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், 1990ம் ஆண்டுச் சம்பவம் ஒருவேளை மறக்கப்பட்டிருக்கும். ISGAவில் கூட சிறியளவிலான நம்பிக்கை ஏற்பட்டிருக்கும். இந்த அரிய சந்தர்ப்பம் தவறவிடப்பட்டுள்ளது.


இதற்கெல்லாம் காரணம், நான் ஏற்கெனவே கூறியபடி விடுதலைப் புலிகளுக்குத் தேவைப்படுவது தமது இருப்பு, தமிழினத்தின் இருப்பு, அதன் பாதுகாப்பு என்பவையே. இவை தவிர்ந்த எதுவும் அவர்கள் பிரச்சினை இல்லை. இவர்களால் தவிர்க்கப்பட்டவற்றில் இலங்கை சோனகரின் விவகாரமும் அடங்கும்.

இத்தகைய கள நிலவரங்களினூடாகப் பார்க்கும்போது,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுதலைப் புலிகள் இன்று வெளிநாட்டு நிர்ப்பந்தங்களுடனேயே தமது அரசியல் பயணத்தை மேற்கொள்கின்றனர். வி. புலிகள் தமது படையணிகளை தென் தமிழீழத்துக்கு வெளியே தெற்கு நோக்கி நகர்த்தினால் அதற்கு இலங்கை அரசு பெரிதாக ஒன்றும் செய்யத் தேவையில்லை. ஒவ்வொரு இராணுவ வீரரின் சாவையும் இலங்கை அரசு, வி.புலிகளின் எல்லை கடந்த பயங்கரவாதமாகவே உலகிற்குக் காண்பிக்கும். ஆகவே வி.புலிகள் இனியொரு பாரிய தாக்குதலை தனது கட்டுப்பாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடத்துமானால் அது அவர்களுக்கெதிரான பிரச்சாரத்திற்கே வழிவகுக்கும்.

விடுதலைப் புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வெளியே தாக்குதல் நடத்தாமல் இருப்பது ராஜபக்ஸ அரசாங்கத்திற்கும் அவரது பதவிக்கும் வலிமை சேர்க்கும். இலங்கைத் தீவில் துப்பாக்கி வேட்டுக்கள் அதிகமாக ஒலிக்காத தன்மை சர்வதேச சமூகத்தை இலங்கையில் மேலும் அக்கறை கொள்ளச் செய்யும். இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளை ஜனநாயகமயப்படுத்தல் என்ற போர்வையில் தமிழரின் நியாயமான அரசியல் உரிமைக்கு ஆப்புவைக்க முயற்சிக்கும்.

இதைவிட விடுதலைப் புலிகள் இலங்கை சோனகரைப் புறந்தள்ளிய தீர்வொன்றுக்குத் தயாராகுவார்களேயானால் அது புதிய பாலஸ்தினத்தின் தன்மைக்கு வி.புலிகளின் ஆட்சிப் பிரதேசத்தை கொண்டுவரும். இலங்கை அரசு நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தித் தமிழினத்தை நிரந்தர பிரச்சினைக்குள் வைத்திருக்க முயலும் என்பது வெளிப்படையான இரகசியமாகும்.

இத்தகைய சாத்தியப்பாடுகளை எல்லாம் கணக்கில் எடுக்காமல் இலவச பத்திரிகை ஒன்று மாசி மாத இறுதியில் இடம்பெற்ற இருதரப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜெனீவா மாநாடு ஒரு 'இறுதிச் சந்தர்ப்பம்' என்று கூறுகின்றது.

சிங்கள பேரினவாதம் ஒருபோதும் தமிழரின் நியாயமான உரிமைகளை ஏற்காதென்றால், ஏன் இந்த இறுதிச் சந்தர்ப்பம்? ஏன் வலிந்து வலிந்து சிங்கள அரசுக்கு சந்தர்ப்பங்கள் கொடுக்கப்படுகின்றன? விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச சமூகத்தைப் புறந்தள்ளி ஒரு தனி நாட்டை பிரகடனப்படுத்தும் சக்தி உள்ளதென்றால், தென் அபிரிக்கா போன்ற ஏதோ ஒரு நாடு அங்கீகாரம் தரத் தயாரென்றால் தமிழீழப்பிரகடனத்துக்கு ஏன் இந்தத் தாமதம்? ஆக, தமிழ் ஊடகங்கள் கூறுவது போன்று தனிநாட்டுப் பிரகடனம் அவ்வளவு இலகுவானதல்ல.

பல்லின மக்கள் கொண்ட நாட்டை இருவின நாடாகப் பார்ப்பதை விடுதலைப் புலிகள் முதலில் நிறுத்தி, சண்டை நிறுத்த, சமாதான, இறுதித் தீர்வு பேச்சுவார்த்தைகளில் இலங்கை சோனகரை புறந்தள்ளாது பல்லின அடிப்படையில் தீர்வொன்றை ஆராய்ந்தால், சர்வதேச சமூகம் தனது நேசக்கரத்தை நீட்டும். இனங்களுக்கிடையே புரிந்துணர்வு அதிகரிக்கும். புரிந்துணர்வு அதிகரித்தால் இலக்குகளை அடைவதும் சுலபமாகும். ☐



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்தமிழரின் முதலாவது புலம் பெயர்வு




என் செல்வராஜா
நூலகவியலாளர்



தாயகத்தில் இருந்து மலேயாவுக்குப் பொருளாதார நோக்கில் புலம்பெயர்ந்த நிகழ்வினையே நாம் ஈழத்தமிழரின் முதலாவது புலப்பெயர்வாகக் கருதுகின்றோம். 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இப் புலப்பெயர்வு இரண்டாவது உலகமகா யுத்தத்துடன் முடிவுக்கு வந்ததாகக் கருதப்படுகின்றது.

சோழர் காலம் முதலாக (கி.பி. 846 - 1279) மலேசிய மண்ணில் தமிழரின் கால் பதிந்த வரலாற்றுத் தடங்கள் காணப்படும் போதிலும், 1786ல் பினாங்குத் தீவு ஆங்கிலேயரின் ஆட்சியின் கீழ் வந்த பிறகே, தமிழர்களின் பாரிய குடியேற்றங்கள் அங்கு ஏற்பட்டுள்ளன. மலேசியக் குடியேற்ற வரலாற்றில் மலேசிய நாட்டை வளப்படுத்த நான்கு கட்டங்களில் அண்டை நாட்டு மக்களின் குடியேற்றங்கள் இடம் பெற்று உள்ளதாக வரலாற்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

முதலாவது கட்டக் குடியேற்றமாக மலேயாவின் கரும்புத் தோட்டங்களிலும், பொதுப்பணித் துறைகளிலும் பணியாற்றவெனக் குடியேற்றப்பட்ட தொழிலாளர்கள் அடங்குகின்றனர்.

இரண்டாவதாக, இந்தியாவில் இருந்து தமிழர்கள் இலங்கையின் மலையகத்திற்கு அழைத்துவரப் பட்டது போல, கங்காணி முறையில் தமிழ் நாட்டின் கிராமங்களில் தொழிலாளர்களைத் திரட்டுவதன் மூலம் வேலைக்குக் கொண்டு வரப்பட்டவர்கள் அடங்குகின்றனர். இந்தியாவில் அக்காலகட்டத்தில் நிலவிய ஜமீன் அடக்கு முறைகளினாலும் கொத்தடிமைக் கொடுமைகளினாலும் சாதீயத்தினாலும் பாதிக்கப்பட்ட இந்திய ஏழைத் தொழிலாளர்களுக்கு இந்தத் தொழில்சார் புலப்பெயர்வு மிகுந்த எதிர்பார்ப்பைத் தந்திருந்தது. அப்போதைய நாகபட்டினம் துறைமுகம் இந்தத் தொழிலாளர்களை ஏற்றி வருவதற்கு மிகவும் பயன்படுத்தப்பட்ட இடமாகும்.

மூன்றாவதாக, பிழைப்பு நாடிச் சுயமாக மலேயாவுக்கு வந்தவர்கள் இடம்பெறுகின்றார்கள். மலேசிய மண் சற்று வளமுற்று வர்த்தகம் பெருகிய காலகட்டத்தில் செட்டியார்கள், முஸ்லீம் வணிகர்கள், சீக்கியர்கள், சிந்திக்காரர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள் என்ற பிரிவினரும், அதற்கும் பின்னர் சற்றே ஆங்கிலம் கற்றிருந்த இலங்கைத் தமிழர்களும் குடியேறினார்கள்.

இலங்கைத் தமிழர்களில் குறிப்பாக யாழ்ப்பாணத் தமிழர்களே இங்கு ஆங்கிலேயர்களால் குடியேற்றப்பட்டிருந்தனர். வண்ணார் பண்ணை, சுழிபுரம், வயாவிளான், புலோலி, வட்டுக்கோட்டை போன்ற பிரதேசங்களிலிருந்து பெருமளவில் இங்கு தபால், கச்சேரி, கல்வி, போக்குவரத்து, மருத்துவம் போன்ற அரசாங்க சேவைகளில் இடைநிலை ஊழியர்களாகப் பணியாற்றவென்று யாழ்ப்பாணத்துத் தமிழர்கள் ஆரம்பத்தில் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இந்தியத் தொழிலாளிகளுக்கும், ஆங்கிலத் துரைமாருக்கும் இடையில் மொழிவழி இணைப்பாளர்களாக இவர்கள் பணியாற்றியதாக வரலாறுண்டு. மொழி வழியால் தமிழராக இருந்தபோதிலும், மலேசியாவில் குடியேறிய இந்தியத் தமிழ்த் தொழிலாளிகளிடையே யாழ்ப்பாணத் தமிழர்கள் குட்டி அடக்குமுறையாளர்களாகவும், ஆங்கிலத் துரைகளின் செல்வாக்கைப் பெறும் நோக்கில் அவர்களின் நலன் பேணுபவர்களாகவுமே விளங்கியுள்ளனர். பின்னாளில் மலேசிய மண்ணில் மலர்ந்த இலக்கியங்கள் பலவற்றில் எம்மவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

### மலேசியா சில தகவல்கள்

Population: 25.3 million (UN, 2005)

Capital: Kuala Lumpur

Area: 329,847 sq km (127,355 sq miles)

Major languages: Malay (official), English, Chinese dialects, Tamil, Telugu, Malayalam

Major religions: Islam, Buddhism, Taoism, Hinduism, Christianity, Sikhism

Life expectancy: 71 years (men), 75 years (women)

Monetary unit: 1 ringgit = 100 sen

GNI per capita: US $4,650 (World Bank, 05)

தகவல் பிபிசி இணையம்.

இத்தகைய குட்டி அடக்குமுறையாளர்களாகவே இனம்காணப்பட்டுள்ளார்கள்.

மலேசிய மண்ணில் மலர்ந்த கவிஞர்களுள் மூத்த முதுபெரும் மலேசிய கவிஞர் ந. பழநிவேலு இயற்றிய "கவிதை மலர்கள்" (1947) நூலில் "சித்தப் போக்கு" என்னும் தலைப்பில் வரும் பாடல், அக்காலப் பாடு பொருளின் பட்டியலாகவே விளங்குகின்றது.

**அயலான் ஒருவன் என்னை**
**'அடிமை இந்தியனே' என்று அழைக்கும் பொழுதும்**
**அதே அடிமை இந்தியன் என்னைத்**
**'தாழ்ந்த குலத்தான்' என்று சாற்றும் பொழுதும்**
**அடிமையின் பயங்கரத் தளையைக் காணும் பொழுதும்**
**...என் மனம் துடிக்கிறது!**

வாணிநேசன் (க.சுப்பிரமணியம், 1971) எழுதிய 'நானும் வரமுடியாது தான்' என்ற சிறுகதை யாழ்ப்பாணத் தமிழர்கள் மேலாளர்களாக இருந்து செய்த கொடுமைகளுக்கு மற்றொரு இலக்கியச்சான்று (பார்க்க: வேரும் வாழ்வும் தொகுதி 2)

அண்டைநாட்டு மக்களின் மலேசியக் குடியேற்றங்களில் நான்காவது கட்டம், 1802ம் ஆண்டில் தமிழ் நாட்டில் போர்க் கைதிகளாகப் பிடிபட்ட தமிழர்களை பினாங்கு தீவை வளப்படுத்தும் நோக்குடன் ஆங்கிலேயர்கள் நாடுகடத்தியபோது ஏற்பட்டது என்று, கர்னல் வெல்சின் "ராணுவ நினைவுகள்" என்ற நூலினை ஆதாரம் காட்டி மலேசிய எழுத்தாளர் பீர் முகம்மது அவர்கள் குறிப்பிடுகின்றார். மருது பாண்டியரின் மகனான துரைசாமி 73 கைதிகளுடன் பினாங்கு தீவுக்கு நாடு கடத்தப்பட்ட விபரங்கள் அதில் காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிடுகின்றார்.

1921ல் நடந்த ஒரு கணக்கெடுப்பின்படி அங்கு குடியேறிய தென்னிந்தியர்களில் 387,509 பேர் தமிழர்கள், 39,986 பேர் தெலுங்கர்கள், 17,790 பேர் மலையாளிகள் இருக்கக் காணப்பட்டனர். தோட்டப்புறங்களிலும் மற்றும் ரயில்வே, சாலை, மின்சாரம், நீர் விநியோகத் துறைகளிலும் தமிழர்கள் பெருமளவில் ஈடுபடுத்தப்பட்டார்கள். இங்கும் ஆங்கில வழி கல்விகற்ற யாழ்ப்பாணத் தமிழர்களும், மலையாளிகளும் தமிழர்களுக்கு அதிகாரிகளாக பணியாற்றும் நிலையுருவாகியது.

> மொழி வழியால் தமிழராக இருந்தபோதிலும், மலேசியாவில் குடியேறிய இந்தியத் தமிழ்த் தொழிலாளிகளிடையே யாழ்ப்பாணத் தமிழர்கள் குட்டி அடக்குமுறையாளர்களாகவே விளங்கியுள்ளனர். பின்னாளில் மலேசிய மண்ணில் மலர்ந்த இலக்கியங்கள் பலவற்றிலும் எம்மவர்கள் இத்தகைய குட்டி அடக்குமுறையாளர்களாகவே இனம் காணப்பட்டுள்ளார்கள்.

மலேசிய மண்ணில் இன்றைய மலேசியாவின் அடையாளச் சின்னமாக நிமிர்ந்து நிற்கும் இரட்டைக் கோபுரங்கள், யாழ்ப்பாணத்தில் இருந்து புலம்பெயர்ந்து மலேயாவுக் குச் சென்றடைந்து அங்கு பெற்றோலியத் துறையின் பெரும்பங்காளரான தமிழர் ஒருவருக்கே உரியது என்ற செய்தியும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

மலேயாவுக்கு பொருளாதார வளம்நாடிக் குடியேறிய யாழ்ப்பாணத்துத் தமிழர்களின் மேலாதிக்கப் போக்கினால் தமது மூதாதையர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட மனக் காயங்கள் நடந்து முடிந்த வரலாறாகியுள்ள இன்றைய நிலையில் நவீன ஈழத் தமிழர்களின் தாயக மீட்பும், புலம்பெயர்வாழ்வும் மலேசியத் தமிழர்களிடையே புதியதொரு பார்வையை அக்கறையை ஈழத்தமிழர்களின்பால் ஈட்டியுள்ளது. இதற்க ஆதாரமாக பல விடயங்களை அந்த மண்ணில் காண முடிகின்றது.

தேசம் சஞ்சிகையால் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த மலேசிய மாநாட்டில் கலந்து கொண்ட மலேசிய நண்பன் பத்திரிகையாளர் பெருமாள் இந்த யாழ்ப்பாண மேலாதிக்கத்தையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட மாற்றங்களையும் நகைச்சுவையுடன் விளக்கி இருந்தார். (படம் : மேல்) ☑



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# UTHR(J) உம்




இவரது அடையாளம் வெளிப்படுத்தப்படாத வகையில் இப்படம் தெரிவு செய்யப்பட்டு உள்ளது. நன்றி பொறன்ட்லைன்.

**நட்சத்திரன் செவ்விந்தியன்** (அவுஸ்திரேலியா)

சமாதானத்துக்கான நோபல் பரிசு பெறத் தகுதியுடைய ஈழத்தமிழர் ராஜன் கூல். இவ்வாறு கூறுகிறபோது நோபல் மன்றம் களங்கமோ பெருந் தவறுகளோ அற்ற அமைப்பு என்று கூறவில்லை. மிகமோசமான யுத்தக்குற்றவாளியான முன்னை நாள் அமெரிக்க வெளிவிவகாரச் செயலர் ஹென்றி கீசிங்கருக்கு 1973ல் சாமாதானத்துக்கான நோபல் பரிசை வழங்கியதன் மூலம் நோபல் மன்றம் தன் தலையில் மண்ணை அள்ளிப் போட்டதுடன் தன்னுடைய உட்சீரழிவுகளையும் உலகுக்கு தெளிவாக எடுத்துக்காட்டியது. நோபல் மன்றம் பெருந்தவறுகளை தொடர்ந்துகொண்டிருப்பதோடு கடந்த காலத்தவறுகளை மீள்பார்வை செய்து ஒத்துக்கொள்ளவும் தவறி வருகிறது. என்னுடைய வாதம் என்னவென்றால் சமாதானத்துக்கான நோபல்பரிசுபெற்ற களங்கமும் சர்ச்சைகளும் அற்ற சர்வதேச மன்னிப்புச்சபை (1977) பாதிரியார் டெஸ்மண்ட் டுற்று(1984) பாதிரியார் கார்லோஸ் பெலோ மற்றும் ஜோசே ராமோஸ் (1996) முதலியவர்களின் பங்களிப்புக்கு எந்த விதத்திலும் ராஜன் கூலின் அல்லது uthr(J)[www.uthr.org] இன் பங்களிப்பு குறைந்தது அல்ல.

அதேசமயம் மாற்று நோபல் பரிசு (The Right livelihood award) பெறுவதற்கும் ராஜன் கூல் தகுதியானவர். (இந்த Alternative Nobel பரிசைப் பற்றி (www.rightlivelihood.org) அதிகளவானவர்கள் அறியாமல் இருப்பதை எட்டாவது உலக அதிசயம் எனலாம்.) 2000 ம் ஆண்டு மாற்று நோபல் பரிசு பெற்ற நால்வருள் ஒருவரான இந்தோனேசிய மனித உரிமைப் போராளி மூனீர்க்கும் கூல் எந்த விதத்திலும் குறைந்தவர் அல்ல. பரிசுபெற்று நான்கு ஆண்டுகளின் பின்னர் மூனீர் இந்தோனேசிய புலனாய்வுப் பிரிவால் நஞ்சூட்டப்பட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த ராஜன் கூலைப் பற்றியும் அவர் சார்ந்த மனித உரிமை அமைப்பான மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் பற்றியும் புலிகளுக்கு ஒத்தூதுகிற அனைத்து தமிழ் ஊடகங்களும் உண்மைக்குப் புறம்பான பல அவதூறுகளைப் பரப்பி வருகின்றன. புலிகளுக்கு ஆதரவானவர்களின் முக்கிய குற்றச்சாட்டுக்களில் ஒன்று uthr(J) இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாக அரசாங்கத்தின் பணத்தில் இயங்குகிறது என்பதாகும். இது முற்றிலும் ஆதாரமற்ற ஒரு குற்றச்சாட்டு. உண்மையில் uthr(J) நடுநிலமையோடும் சுயாதீனத்தன்மையோடும் இலங்கையில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகிற அனைத்து தரப்பினரது நடவடிக்கைகளையும் ஆவணப்படுத்தி விமர்சித்து வருகிறது என்பதை அவர்களது அறிக்கைகளையும் புத்தகங்களையும் படிப்பவர்கள் ஐயம் திரிபுற விளங்கிக் கொள்ளலாம். அரசாங்கத்தின் மனித உரிமைமீறல்களையே கடுமையாக விமர்சிக்கிற அமைப்புக்கு அரசாங்கம் தான் பணம் கொடுக்கிறது என்றால் அவ்வரசாங்கம் மனித உரிமைகளில் உண்மையில் அக்கறை கொண்டுள்ளது என்பதுதானே அர்த்தம்!. uthr(J) EPDP போன்ற மாற்று இயக்கங்களின் மனித உரிமை மீறல்களையும் ஆவணப்படுத்தியுள்ளது. புலிகளின் மனிதஉரிமைமீறல்களோடு ஒப்பிடுகிற போது EPDP இனரின்

மீறல்கள் எண்ணிக்கையில் மிகக்குறைவு என்பதால் EPDP இன் உத்தியோகபூர்வ இணையமே uthr(J) க்கு இணைப்பு கொடுத்துள்ளது. மறுபக்கத்தில், புலிகளின் ஆதரவாளர்கள் புகலிடத்தில் அகதி அந்தஸ்துக்கு ஸ்டோரி எழுதுகிறபோது உபயோகப்படுத்தியதும் உபயோகப்படுத்துவதும் uthr(J) அறிக்கைகள்தாம்.

ராஜன் கூல் ஒரு பாதிரியாருடைய மகன். அவருடைய மாணவப் பருவத்தில் அவரும் ஒரு பெடரல் கட்சியின் ஆதரவாளராகவும் செல்வநாயகத்தில் நம்பிக்கை உடையவராகவும் இருந்தவர். 1971ம் ஆண்டு வங்க தேசத்தின் பிறப்பைக்கொண்டாடுவதற்காக யாழ்நகர மண்டபத்தில் நடத்தப்பட்ட விழாவில் உற்சாகத்தோடு கலந்து கொண்டார். 1977 ம் ஆண்டு தமிழர்களுக்கு எதிராக நடந்த வன்முறைச்சம்பவங்களை அடுத்து TRRO, காந்தியம் முதலிய அமைப்புக்களோடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈடுபடத்தொடங்கினார். பின்னர் லண்டனுக்கு உயர்கல்வி கற்கச் சென்ற கூல் 1985ம் ஆண்டு யாழ் திரும்பினார். இக்காலப் பகுதியில்தான் யாழ் பல்கலைக் கழக கணிதவியல் விரிவுரையாளராக இருந்த அதே நேரம் TRRO கந்தசாமியின் யோசனைப்படி Saturday Review பத்திரிகையோடு ஈடுபடத் தொடங்கினார். இப்பத்திரிகையில் இருந்த மாக்சிஸ்டும் பத்திரிகையாளருமான உன்னத மனிதர் ஏ.ஜே கனகரட்னா தான் ராஜன் கூல் பெடரல் கட்சியில் வைத்திருந்த அசையாத நம்பிக்கையை கேள்விக்குட்படுத்தினார். 1986 ம் ஆண்டு மே புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ரெலோ இயக்க உறுப்பினர்களின் படுகொலைகளுக்கு கூல் சாட்சியானர். Saturday Review பத்திரிகையின் ஆசிரியரான காமினி நவரட்னா ராஜன் கூலையே இப்படுகொலைகள் சம்பந்தமான ஆசிரியர் தலையங்கம் எழுதுமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்கி அவ்விதழுக்கான தலையங்கத்தை கூல் எழுதினார். ரெலோ மீதான படுகொலைகள் பற்றி இந்தியாவின் UNI செய்தி நிறுவனத்தைச்சேர்ந்த பி.ஜெயராமுக்கும் ஒரு நீண்ட செவ்வியை கூல் வழங்கினார். ரெலோ மீதான படுகொலைகளும் கால் பொப்பரின் எழுத்துக் களும் தான் கூலுக்கு தேசியவாதம் மீதிருந்த கடைசி நம்பிக்கையையும் அற்றுப்போகச் செய்தன.

1986ம் ஆண்டு ராஜினி திராணகமவும் சிறிதரனும் தங்களின் உயர் கல்வியை முடித்துக் கொண்டு லண்டனிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பினார்கள். இதையடுத்தே இவர்கள் அனைவரும் சேர்ந்து ‘முறிந்த பனை’ நூலை எழுதி வெளியிடுகிறார்கள். மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் உதயமானது. 1989 ம் ஆண்டு ராஜினி புலிகளால் கொல்லப்பட்டார். 1990 ம் ஆண்டு இரண்டாவதுஈழப்போர் தொடங்கியதுடன் புலிகள் UTHR(J) இன் ஏனைய உறுப்பினர்களுக்கும் குறிவைக்க விழைந்ததனால் அவர்களும் யாழ்ப்பாணத்தை விட்டு தென்னிலங்கைக்கு தப்பிச்சென்றார்கள். 1991 ம் ஆண்டு UTHR(J) க்கு நெருக்கமாக இருந்த யாழ் பல்கலைக்கழக மாணவர்களான செல்வியும் மனோகரனும் புலிகளால் கடத்திச்செல்லப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டுக் கொல்லப்படார்கள். (இவர்களின் நண்பரான

சிவரமணி என்ற கவிஞை தற்கொலை செய்துகொண்டாலும் இவரது தற்கொலைக்கும் மறைமுகக் காரணம் புலிகளே) யாழ் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளர்களாக இருந்த கூலும் சிறிதரனும் அவர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு அநியாயமாக கலைக்கப்பட்டார்கள். தங்களது மனச்சாட்சியின் கைதிகளாக நடந்துகொண்ட அவ்விருவரினதும் கல்விசார் தொழில் அத்தோடு பாழாய்ப்போனது.

இன்று தென்னிலங்கையில் இருந்து இயங்கி வருகிற UTHR(J) இல் சிறிதரனும் பங்களிக்கிறார் என்றாலும் அதன் முழுநேர உறுப்பினர் ராஜன் கூலே. பல சமயங்களில் மனித உரிமை மீறல்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க அல்லது தகவல்களை உறுதிப்படுத்த ராஜன் கூலே மாறு வேடங்களில் பயணிக்கிறார். இன்று அவரது வாழ்வே ஒரு சுவாரசியமான மர்ம நாவலைப் போலாகிவிட்டது. எனினும் கூல் தன்னுடைய நேரங்களை பரபரப்பின்றி அமைதியாகவும் கழித்து வாழ்வின் சமநிலைகளைப் பேண முனைகிறார். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழுந்து சிக்கலான கணிதச் சமன்பாடுகளையும் புதிர் களையும் தீர்க்கிறார். இது அவரை அமைதியாகவும் தெளிவாகவும் வைத்துக் கொள்ள உதவுகிறது. இசையிலும் ஈடுபாடுள்ள கூல் நன்றாகப் பியானோ வாசிக்கக் கூடியவர்.

**ஏறத்தாழ அனைத்து தமிழ் ஊடகங்களுமே எண்பதுகளில் இலங்கை அரசு சார்பாக செய்திவெளியிட்ட லங்கா புவத் செய்தி தாபனத்தைவிட பலமடங்கு மோசமாக இயங்கி வருகின்றன.**

“இன்று பெரும்பாலான மனித உரிமை சம்பந்தமான வேலைகள் இலகுவானவைகள் அல்லது ஏறத்தாழ 6000 மைல்களுக்கப்பாலிருந்து சொகுசான மேசைகளிலிருந்து எழுதப்படுவன” என்று கூறுகிறார் ஹாவாட் பல்கலைகழக சட்டக்கல்லூரியின் மனித உரிமைகள் திட்டத் தின் துணைப் பணிப்பாளரான பீட்டர் ரோசன்பிளம். “ஆனால் ராஜன் கூலின் மனித உரிமை மீறல் அறிக்கைகளோ தளத்திலிருந்து மிக நெருக்காமான பாணியில் எழுதப்படுவதால் சிக்கலான பிரச்சினைகளின் பன்முகப்பட்ட கோணங்களும் நுணுக்கமாக அலசி ஆராயப்பட்டு வருபவை. மிக மெச்சத்தக்க முக்கியமான நிகழ்வாக UTHR(J) இருக்கிறது.” என்று மேலும் கூறுகிறார் ரோசன்பிளம்.

இலங்கையில் ஆங்கிலமூலக் கல்விபெற்ற கடைசி வகுப்பைச் சேர்ந்தவர் ராஜன் கூல். அவரது காலப் பாடத்திட்டத்திற்கு ஏற்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர் தமிழை ஒரு பாடமாகக் கற்றிருந்தார். ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் பரிச்சயமுள்ள ஒருவர் ஆங்கில மொழியின் வளர்ச்சியடைந்த, செப்பஞ் செய்யப்பட்ட (refined) மற்றும் நெகிழ்ச்சியடைந்த தன்மைகள் காரணமாக தமிழிலன்றி ஆங்கிலத்தில் எழுதுகிறபோது சுகமாகவும் தெளிவாகவும் துல்லியமாகவும் வெளிப்படுத்தலாம் என்று உணர்கிறார்கள். இதன் அடிப்படையிலேயே கூல் அறிக்கைகளும் புத்தகங்களும் ஆங்கிலத்தில் எழுதுகிறாரே தவிர அவர் தமிழை நேசிப்பவர். அவர் தமிழில் வருகிற விடயங்களை தொடர்ச்சியாக வாசித்து வருபவர். ஒரு கிறிஸ்தவர் என்றாலும் இலங்கைத் தமிழ் பண்பாட்டு விழுமியங்களில் தோய்ந்த ஒரு தமிழ் கிறிஸ்தவர் கூல். மிகக் கண்டிப்பான சைவ உணவுக்காரர். பாலையும் பாற்பொருட்களையும் கூட அவர் அசைவ உணவு என்று கருதுவதால் அவற்றையும் அவர் உண்பதில்லை. மிருகங்களில் பிரியமுள்ள ஒரு மனிதரும் கூட.

2001 ம் ஆண்டு முறிந்த பனை மரபுக்கேற்ப ராஜன் கூல் Sri Lanka: The arrogance of power என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

UTHR(J) இலங்கையின் மனித உரிமை மீறல்களை ஆவணப் படுத்துவதோடு அவற்றுக்குப் பின்னாலிருக்கிற அரசியலையும் அலசி ஆராய்கிறது. இந்த இரண்டு பணிகளையுமே இன்று ஈழ மற்றும் புலம்பெயர் தமிழ் ஊடகங்கள் நேர்மையோடும் பக்கம் சாராமலும் செய்வதற்கு சுயதணிக்கையும் புலிகளின் மிரட்டலும் தடையாகவுள்ளன. ஏறத்தாழ அனைத்து தமிழ் ஊடகங்களுமே எண்பதுகளில் இலங்கை அரசு சார்பாக செய்திவெளியிட்ட லங்கா புவத் செய்தி தாபனத்தைவிட பலமடங்கு மோசமாக இயங்கி வருகின்றன. இந்த இடத்தில் தான் கூல் ஒரு மனித உரிமைப்போராளி மட்டுமல்ல என்பது தெளிவாகிறது. அதாவது UTHR(J) தான் இன்று இலங்கையிலிருந்து இயங்குகிற இலங்கைத்தமிழர்கள் சம்பந்தப்பட்ட ஒரேயொரு நம்பகரமான செய்தி தாபனம். ராஜன் கூல் நம் காலத்தின் தலைசிறந்த அரசியல் விமர்சகர். ☞


Source

1. www.pbs.org/frontlineworld/stories/srilanka/profile.html
2. Sri Lanka : The Arrogance of Power by Rajan Hoole.


## சீவரத்தினம் ஐயாவுக்கு bye! bye!!



லண்டன் தமிழ் நிலையத்தை தொடர்ந்து சிக்கலக்கு உள்ளாக்கி வந்த ருற்றிங் முத்துமாரி அம்மன் ஆலயத் தலைவர் ந சீவரத்தினம் இறுதியாக இவ்வாண்டு ஜனவரியில் தனது பதவியை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டார். தேசம் சஞ்சிகையும் உதயன் பத்திரிகையும் இவரது பல்வேறு நடவடிக்கைகளையும் கேள்விக்குட்படுத்தி 'bye bye சீவரத்தினம் ஐயா' என்று தலையங்கம் எழுதியது அனைவரும் அறிந்ததே. தனது பதவியைத் தக்க வைத்துக்கொள்ள லண்டன் தமிழ் நிலையத்திற்கு எதிராக இவர் Charity Commissionல் முறைப்பாடு செய்ததும் வெளிவந்ததை அடுத்து அவர் அமைப்பின் பெரும்பாலும் அனைவரதும் ஆதரவை இழந்தார். மேலும் லண்டன் தமிழ் நிலையம், ஈழபதீஸ்வரர் ஆலயம் என்பனவற்றுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட அவரது ஆலய முயற்சிகளும் தற்போது படுத்துக்கிடக்கின்றது.

## ரிபிசி ராம்ராஜ் கைது தொடரும் மர்மம்

தமிழ் ஒளிபரப்புக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் வி ராம்ராஜ் ஜெனிவாவில் பத்திரிகையாளர் மாநாட்டிற்கு சில நிமிடங்கள் முன்னதாக கைது செய்யப்பட்டார். அரசுக்கும் - வி.புலிகளுக்கும் இடையேயான பேச்சுவார்த்தை இடம்பெற்ற ஜெனிவாவில் சம்பந்தப்பட்ட இரு தரப்பினரதும் மனித உரிமை மீறல்களை கண்டித்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த போதே இவர் கைது செய்யப்பட்டு உள்ளார்.

வி.புலிகளில் இருந்து பிரிந்த கருணா அணியுடன் நெருக்கமான ராம்ராஜ் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து; வி.புலிகளின் ஊடகங்கள் ராம்ராஜ் மீது பாரதூரமான குற்றச்சாட்டுகளை தொடர்ந்து சுமத்தி வருகின்றன. ஆனால் ராம்ராஜ் மீது சுவிஸ் பொலிசார் என்ன குற்றத்தை பதிவு செய்துள்ளனர் என்பது தமக்கு இன்னும் தெரிவிக்கப்படவில்லை என ரிபிசி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் ரிபிசி யின் செயற்பாடுகளை ஒழுங்கமைக்க ஐரோப்பியக் குழு லண்டன் வந்து அலோசணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இச்செய்தி பதிப்புக்குச் செல்லும் வரை (06.03.06) ராம்ராஜ் பற்றிய உத்தியோகபூர்வமான செய்திகள் எதுவும் எமக்கு கிடைக்கவில்லை. ராம்ராஜுடைய விடுதலையை உறுதி செய்வதில் ஆர் ஜெயதேவன், மற்றும் குமாரசூரியர் ஆகியோர் தீவிமைாக ஈடுபட்டு உள்ளனர்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

IMMIGRATION / EMPLOYMENT / HOUSING / WELFARE

# Rengan N Devarajan

## SOLICITORS



Immigration & Nationality

Employment

Land Lord & Tenant

Housing

Welfare Benefits

Matrimonial

**1ST Floor**
**128 Ilford Lane, Ilford**
**Essex, IG1 2LE**

**Tel : 020 8478 5797**
**Fax : 020 8478 4486**

www.tamilarangam.net

# இலங்கையில் மனித உரிமைகளுக்கான போராட்டத்தில் பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்தனர்.



சையட் பசீர், அன்டி லவ், ஸ்ரீபன் பொன்ட், பரி காடினர்

மார்ச் 7ல் இலங்கையில் மனித உரிமைகளை நிலைநிறுத்தி சமாதானத்தைஏற்படுத்துவதற்கான போராட்டம்வெஸ்ற்மினிஸ்டர்பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பரி காடினர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொழிற்கட்சியைச் சேர்ந்த பா உ அன்டி லவ், லோட் ரொபி ஹரிஸ், பா உ ஸ்ரீபன் பொன்ட், பா உ மைக் கேப்ஸ் மற்றும் லிபிரல் டெமகிரட் பா உ எட்வேட் டேவி ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ் ஜனநாயகக் கொங்கிரஸ் இதனை ஏற்பாடு செய்திருந்தது. பிரித்தானிய பாராளுமன்றஉறுப்பினர்கள் பலர் கலந்துகொண்ட ஒரு நிகழ்வாக இது அமைந்திருந்தது.

இந்நிகழ்வில் ஆர் ஜெயதேன், சையட் பசீர், உபாலி குரே ஆகியோர் பிரதான உரையை ஆற்றினர். ஜெயதேவன் தனது உரையில் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், முஸ்லீம்கள் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக பங்குபற்ற வழி ஏற்படுத்தப்பட வேண்டும், இணைய வலையத்தில் செய்யப்படும் பயங்கரவாத செயல்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். சையட் பசீர் தனதுரையில் முஸ்லீம்களின் தனித் தரப்பை வலியுறுத்தியதுடன் பிரித்தானிய அரசு அதிகாரப் பரவலாக்கத்தை 30 ஆண்டுகளுக்குப் பின்னரே ஸ்கொட்லந்தில் நடைமுறைப்படுத்தியதைச் சுட்டிக்காட்டினார். பா உ பரிகாடினர் வட கிழக்கு முஸ்லீம்களின் வெளியேற்றம் பற்றி பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பியதைச் சுட்டிக்காட்டி அவருக்கு தன் நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். இலங்கை அரசாங்கம் காலம் தாழ்த்தாது உடனடியாக அதிகாரப் பரவலாக்கத்தை அமுல்படுத்த வேண்டும் என உபாலி குரே தனது உரையில் தெரிவித்தார். அவர் தனதுரையில் முஸ்லீம்களின் உரிமைகள் மறுக்கப்பட முடியாது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

விடுதலைப் புலிகளின் லண்டன் தலைமைக்குள் ஏற்பட்ட பிளவும் அதனைத் தொடர்ந்து வன்னி சென்ற ஆர் ஜெயதேவன் தடுத்து வைக்கப் பட்டதும் விடுவிக்கப்பட்டதும் யாவரும் அறிந்ததே. தற்போது ஜெயதேவன் விடுதலைப் புலிகளின் மிக முக்கிய சவாலாகி உள்ளார். விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்களை சர்வதேச சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டும் நடவடிக்கையில் ஜெயதேவன் முழுவீச்சில் ஈடுபட்டு உள்ளார். விடுதலைப் புலிகளின் தீவிர செயற்பாட்டாளராக இருந்து, லண்டனில் அன்ரன் பாலசிங்கத்தின் இருத்தலுக்கு உறுதுணையாக இருந்து இன்று எதிர்முனைக்கு சென்றுள்ள ஜெயதேவன் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளின் சர்வதேச பிரச்சாரத்திற்கு பெரும் தடைக்கல்லாகவே இருக்கப் போகிறார் என்பதை இந்நிகழ்வு கட்டியம் கூறியுள்ளது.

பா உ அன்டி லவ் விடுதலைப் புலிகளின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பல குற்றச்சாட்டுகள் வந்துள்ளதை சுட்டிக்காட்டினார். மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் சிறுவர்கள் யுத்தத்தில் பயன்படுத்தப்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும் என்ற விடயங்களை



மைக் கேப்ஸ், பரி காடினர், அன்டி லவ் உரையாற்றுகிறார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லோட் ரொபி கரிஸ் உரையாற்றுகிறார்.

அன்டி லவ் வலியுறுத்தினார். விடுதலைப் புலிகள் சிறுவர்களை படையணிகளில் சேர்க்கிறார்கள் என்பது ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட்டு உள்ளது என்று குறிப்பிட்ட அன்டி லவ் இது மிகவும் வருத்தத்திற்குரிய விடயம் எனத் தெரிவித்தார். பெரும்பாலும் பிரித்தானிய பா உ க்கள் தமிழ் மக்கள் மத்தியில் வெளிப்படையாக விடுதலைப் புலிகளுக்கு எதிரான கருத்தை வெளியிடுவதை தவிர்த்தே வந்துள்ளனர். இப்போக்கில் தற்போது சிறு மாற்றம் ஏற்பட ஆரம்பித்து உள்ளது. அவ்வகையில் அன்டி லவ் அதனை வெளிப்படுத்தி உள்ளார். அங்கு சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் நிச்சயமாக பிரித்தானிய அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படும் என்ற உறுதியையும் அன்டி லவ் வழங்கி இருந்தார். பிரித்தானிய அரசு குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்புவதற்கு தாம் அழுத்தம் கொடுத்துவருவதாகக் குறிப்பிட்ட அன்டி லவ் அக்குழுவைச் சந்திக்க பல்வேறு அமைப்புகளும் முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

பரி காடினர் தனது உரையில் மனித உரிமைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து இருந்தார். பக்கம் சாராது மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பதன் சிரமங்களைச் சுட்டிக்காட்டி மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்க வந்துள்ள நீங்கள் 'மிகவும் ஆபத்தானவர்கள்' என்று நகைச்சுவையாகத் தெரிவித்தார். ஸ்ரீபன் பொன்ட் பேசுகையில் பிரித்தானியாவுக்கு தமிழர்கள் தங்கள் உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வரும் நிலை இருக்கக் கூடாது மாறாக அவர்கள் நல்ல நண்பர்களாக சகோதரர்களாக வரவேண்டும் வாழ வேண்டும் என்று தெரிவித்தார்.

லோட் ரொபி ஹரிஸ் லண்டனில் வாழும் தமிழர்கள் இளைஞர்களின் வன்முறையால் பாதிக்கப்படுவது பற்றி விரிவாகக் கூறினார். ஒரு சில இளைஞர்களது செயற்பாடுகள் முழுச் சமூகத்தையும் பாதிக்கிறது என்று குறிப்பிட்ட ரொபி ஹரிஸ் பொலிசாரின் ஒத்துழைப்புடன் இது முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

முடிவில் மங்கையற்கரசி அமிர்தலிங்கம், இலங்கை அரசின் இனவாதப் போக்கை சுட்டிக் காட்டி அதற்கு பதிலாக உருவாகிய தமிழ் ஆயுத அமைப்புகள் இறுதியில் தமிழர்களின் வாழ்க்கையை நாசமாக்கி வருவதாகக் குறிப்பிட்டார்.

## போராட்டத்தின் இறுதியில் மூன்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

இலங்கை அரசு, விடுதலைப் புலிகள், நோர்வே அனுசரணை யாளர்களுக்கு வழங்கப்பட்ட முதலாவது தீர்மானத்தில் இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஒத்துக்கொண்ட அம்சங் களை சரியாகக் கடைப்பிடிப்பதுடன் மனித உரிமைகள் மைய விடயமாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளனர். பேச்சு வார்த்தையில் முஸ்லீம் பிரதிநிதித்துவம் இருக்க வேண்டும் என்றும் தெற்கு மற்றும் மாற்றுக் கருத்துடையவர்களும் பங்கேற்கும்படியான செயன்முறை ஒன்று அவசியம் எனவும் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். மேலும் விடுதலைப் புலிகளினால் தடுத்துவைக்கப்பட்டு உள்ளவர்களை விடுவிக்க நோர்வே அனுசரணையாளர்களும் சர்வதேச சமூகமும் அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் அத்தீர்மானத்தில் கேட்கப்பட்டு உள்ளது.

பிரித்தானிய அரசுக்கும் ஐரோப்பிய ஒன்றியத் துக்கும் வழங்கப்பட்ட இரண்டாவது தீர்மானத்தில் நிதி சேகரிப்பில் ஈடுபடுவது, புலம்பெயர்ந்த தமிழர்களின் ஜனநாயகச் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிப்பது, மாற்றுக் கருத்தாளர் களை சீண்டுவது தாக்குவது போன்ற விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அத்தீர்மானத்தில் கேட்கப்பட்டு உள்ளது.

இறுதித் தீர்மானம் பிரித்தானிய அரசு நோர்வே அரசு, பிரித்தானிய ஒன்றியம் ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டது. இணைய வலையத்தைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகள் மேற்கொள்ளும் Cyber Terrorisms தை நிறுத்த வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டு உள்ளது.

உபாலி குரே உரையாற்றுகிறார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கருணானந்தராஜாவின் குயில்பாட்டின் தத்துவ மர்மங்களுக்கு விருது



பெப்ரவரி 5 இல் சென்னை மைலாப்பூர் பாரதீய வித்யா பவனில் ராம் நிறுவனங்களால் நடாத்தப்பட்ட 19வது பாரதி விழாவில் எஸ். கருணானந்தராஜாவுக்கு (யுகசாரதி) அவர் எழுதிய பாரதியின் குயில்பாட்டின் தத்துவ மர்மம் என்னும் நூலுக்காக 'பாரதி இலக்கியச் செல்வர்' விருதும் பொற்கிழியும் பொன்னாடையும்வழங்கிக்கௌரவிக்கப்பட்டது. இவருடன் சோவியத் நாட்டின் நேரு விருது பெற்ற ஜனசக்தி இதழின் முன்னாள் ஆசிரியர் பாரதி சீனிவாசன், கோவையைச் சேர்ந்த திருமதி சாதனா ராதாக்கிருஷ்ணன் ஆகியோரும் பாரதி புகழ்பரப்பும் சான்றோருக்கான மேற்படி விருதைப் பெற்றுக்கொண்டனர்.

சென்னை வை.எம். சி ஏ பட்டி மன்றத்தில் கருணானந்தராஜாவின் பாரதி குயில்பாட்டின் தத்ததுவ மர்மம் நூல் பற்றிய அவரது விளக்கவுரை பல அறிஞர்கள் முன்னிலையில் நிகழ்த்தப்பட்டு அந்நூலின் கருத்துகளுக்கான அங்கீகாரமும் பாராட்டும் அவருக்குக்குக் கிடைத்தது.



ஈழப் போராட்டத்தின் சாட்சியம் வரலாறானது

# சி புஸ்பராஜா காலமானார்



ஈழப் போராட்டத்தில் எனது சாட்சியம் நூலின் ஆசிரியர் சி புஸ்பராஜா மார்ச் 10ல் பாரிசில் காலமானார். சில வாரங்களுக்கு முன் புற்றுநோயால் பாதிக்கப்பட்டது கண்டறியப்பட்டு அவரது இறுதி முடிவு குடும்பத்தினருக்கு அறிவிக்கப்பட்டது. இறுதி முயற்சியாக அவரை தமிழ்நாட்டுக்கு அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்கவும் முயற்சிக்கப்பட்டது. ஆனால் அங்கும் காலம் கடந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் இவர் மீண்டும் பாரிசுக்கு திரும்பிய சில தினங்களில் காலமானார். இவரது மனைவி மீரா பிள்ளைகள் கீதாஞ்சலி, விதுரன், துரோணன் விஷ்மன் ஆகியோருக்கு தமிழ் எழுத்துலகு தங்கள் அனுதாபத்தை தெரிவித்து வருகிறது.

ஈழப்போராட்டத்தின் முன்னோடிகளில் ஒருவரான சி புஸ்பராஜா இலங்கையின் வடகடலோரக் கிராமமான மயிலிட்டியில் பிறந்தவர். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிப முன்னணியில் 1969 ல் இணைந்து ஈழமக்களின் அரசியலில் பிரவேசித்த அவர், பின்னர் தமிழ் மாணவர் பேரவையின் தீவிர செயற்பாட்டாளராகவும் இயங்கினார். மேலும் தமிழ் இளைஞர் பேரவையை ஆரம்பித்த இவர் அதன் முதலாவது தலைவராகவும் செயலாற்றினார். இனப் பிரச்சினைக்கு தீவிரவாதத்தையும், ஆயுதப் போராட்டத்தையும் வலியுறுத்தி ஆரம்பிக்கப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபர்களில் ஒருவரும் அதன் செயலாளராகவும் விளங்கினார்.

1974-1980ற்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கை சிறைக்கூடங்களான யாழ் சிறைச்சாலை, கொழும்பு வெலிக்கடை ஆகியவற்றிலும் மற்றும் பனாகொடை ராணுவத் தடுப்பு முகாமிலும் பல வருடங்கள் சிறைவைக்கப்பட்டிருந்தார். இடது சாரிக் கருத்துக்களில் மிக்க ஈடுபாடு கொண்ட இவர் பிரான்ஸ் நாட்டில் அரசியல் அந்தஸ்துப்பெற்று அகதியாக வாழ்ந்தபோதும் இலக்கிய செயற்பாடுகளோடு தமது இறுதி வாழ்க்கை வரை ஈடுபடுத்தியவராவார்.

பாரிஸில் நடைபெறும் இலக்கியச் சந்திப்பு மற்றும் இலக்கிய நிகழ்வுகளில் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டி வந்தவர் சி புஸ்பராஜா. சபாலிங்கம் படுகொலை செய்யப்பட்ட பின் சபாலிங்கம் நண்பர்கள் வட்டத்தை உருவாக்கி தோற்றுத்தான் போவோமா என்ற தொகுப்பை சி புஸ்பராஜா வெளியிட்டார். இவரது இறுதிச் சடங்குகள் மார்ச் 14ல் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முற்றிலும் புதிய நிகழ்ச்சி நியூகாம் தமிழர்களின் மாநாடு





தமிழ் சமூக அமைப்பினரால் Tamil Community Forum ஏற்பாடு செய்யப்பட்ட நியூஹாம் தமிழர்களின் மாநாடு மார்ச் 11 அன்று ஈஸ்ற்ஹாம் நகரமண்டபத்தில் இடம்பெற்றது. தமிழ் சமூகத்தை முன்னோக்கி நகர்த்த இளைய சமூகத்தின் கருத்துக்களை கேட்டறியும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இம்மாநாட்டில் 300க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

இன்றைய தமிழ் சமூகத்தின் எண்ணங்களை இளையவர்களுடன் பகிர்ந்துகொள்ளவும்.இதுஒருவாய்ப்பாகஅமைந்திருந்தது.உள்துறை அமைச்சு, நியூஹாம் கவுன்சில், நியூஹாம் பொலிஸ், முரண்பாடுகளும் மாற்றங்களும் Conflict & Change என்ற அமைப்பு என்பனவற்றின் ஆதரவுடன் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ் மக்கள் மத்தியில் லண்டனில் முதற் தடவையாக நிகழும் இவ்வகையான மாநாடு இது என்பது குறிப்பிடத்தக்கது. மங்கள விளக்கேற்றி இரு நிமிட மௌன அஞ்சலியுடன் மாநாடு ஆரம்பமானது. முதல் வரவேற்பு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து அறிமுகமும் இடம்பெற்றது. தொடர்ந்து இளையவர்களுக்கும் மூத்தவர்களுக்குமான தனிப் பட்டறைகள் இடம்பெற்ற பின் இருதொகுதியினரும்இணைந்த பட்டறை இடம்பெற்றது.

அதன்பின்உணவுபரிமாறப் பட்டு மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இறுதியில் இடம்பெற்றது.




## அமெரிக்க அரசு மீண்டும்....

இலங்கை அரச படைகளும், வி.புலிகளும், அரசுடன் இயங்கும் துணைப்படைகளும் மனித உரிமைகளை மீறுவதாகவும் 2002 சமாதான உடன்படிக்கையை மீறுவதாகவும் அமெரிக்க அரசு தனது கடுமையான கண்டனத்தை தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் ஒவ்வொரு மீறலுக்கும் வி.புலிகள் 14 மீறல்களை மேற்கொள்வதாக அதில் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது.

மேலும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட 25 பேர் பொலிசாரால் கொல்லப்பட்டதையும் முதற்தடவையாக அமெரிக்க குறிப்பிட்டுள்ளது. தொடரும் அவ்வறிக்கையில் வி.புலிகள், படையினர் 68 பேர் மாற்று குழுக்களைச் சேர்ந்தவர்கள் 106 பேர் உட்பட 200 கொலைகளை மேற்கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டு உள்ளது. அவ் அறிக்கையில் புளட், ஈபிடிபி, கருணாபிரிவும் கண்டிக்கப்பட்டுள்ளது.

நீதித்துறை அல்ல அது அவர்களின் முகவர்கள் என்றும் சுயாதீனமற்றது என்றும் வி.புலிகளின் நீதித்துறையை அமெரிக்கா கடுமையாக விமர்சித்துள்ளது. வி.புலிகளின் நீதிபதிகளிடம் சட்ட அறிவு சிறிதளவே உள்ளது அல்லது இல்லை என்றும் வி.புலிகளின் நீதிமன்றங்கள் சட்டவரையறைக்குள் செயற்படவில்லை என்றும் தெரிவித்துள்ள அவ்வறிக்கை வி.புலிகள் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தமிழ் மக்களை தமது நீதித்துறைக்குள் பலவந்தப்படுத்துவதாகவும் அவ்வறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.




கலைச்செல்வனின் ஓராண்டு காலம் சென்ற எழுத்தாளர் கலைச்செல்வனின் ஓராண்டு நினைவையொட்டி 'மறக்காத மனமுகமாய் எங்கள் கலைச்செல்வன்' என்ற ஞாபகார்த்த நிகழ்வு மார்ச் 5 பாரிஸில் இடம்பெற்றது. நண்பர்கள் வட்டம் இந்நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பொலிசாரின் பார்வை தொடர்கிறது

வெம்பிளி பகுதி தமிழ் பொலிஸ் ஆலோசனைக்குழுக் கூட்டம் பெப்ரவரி 23ல் இடம்பெற்றது. வடக்கு லண்டன் பகுதியில் இடம்பெற்ற இரு படுகொலைகள் தொடர்பான விசாரணைகள் தொடர்வதாகவும் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை எனவும் அதில் கலந்துகொண்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்தார். இக்கூட்டத்திற்கு மு சிவராஜா தலைமை தாங்கினார்.

பிந்திக் கிடைத்த மற்றுமொரு தகவலின்படி முதற் 10 குற்றவாளிகளை நாடுகடத்த பொலிஸ் பிரிவு தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. முதற்கட்டமாக மூவர் விரைவில் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என Alf Hitchcock (Commander North East & Safer Neighbourhoods) தெரிவித்தார்.



## வாராவாரம் தமிழர்கள் திருப்பி அனுப்பப்படுகிறார்கள் தடுத்து நிறுத்தக்கோரி போராட்டம்

அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு எதிராக லண்டன் ரபல்கர் ஸ்கயரில் அமைதிப் போராட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. மார்ச் 19, மதியம் 12:00 - 3:00 ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்போராட்டத்தில் அகதிகளைத் திருப்பி அனுப்பவதற்கு எதிரான கையெழுத்துப் போராட்டமும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இது பற்றி தகவல் வெளியிட்ட சட்டத்தரணி அ கனநாதன் வாரா வாரம் பிரித்தானிய அரச தஞ்சம் கோரிய தமிழர்களைத் திருப்பி அனுப்பி வருவதாகவும் அது பற்றி தமிழ் சமூகமும் தமிழ் ஊடகங்களும் மௌனம் சாதிப்பது மனவருத்தத்திற்குரியது எனத் தெரிவித்தார்.

இலங்கையில் சமாதானம் ஏற்படும் வரை அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நிறுத்தவும், அகதிகளைத் திருப்பி அனுப்பும் விடயத்தை மனிதாபிமான ரீதியில் அணுகுக, அகதிகளது ஆட்பதிவு அலுவலகங்களில் தஞ்சம் கோரியவர்களை தரக்குறைவாக நடத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளை முன் வைத்து இப்போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. AGTAS என்ற அமைப்பு இப்போராட்டத்திற்கான அழைப்பை விடுத்துள்ளது. அனைவரது ஒத்துழைப்பையும் அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.


மக்கள் சேவையே அப்பன் விநாயகன் சேவை

**வோல்தம்ஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயம்**

29 - 03 - 2006 புதன் கிழமை முதல் 08 - 04 - 2006 சனிக்கிழமை வரை

**வசந்த நவராத்திரி அலங்கார உற்சவம்**

**தினமும்**

| | |
|---|---|
| காலை 10:00AM | மாலை 8:30PM |
| அம்பாள் அபிஷேகம் | வசந்த மண்டலப் பூசையும் |
| லலிதா திரிசதி ஹோமம் | அம்பாள் உலாவரும் காட்சியும் |
| மாலை 5:00PM | நடைபெறும் |
| அபிஷேகம் | |
| 7:30PM - 8:30PM | 06 - 04 - 2006 8:00PM |
| சென்னை சொல் ஞாயிறு திரு மணிகண்டன் அவர்களின் சிறப்பு சொற்பொழிவு. | அலங்காரத் தேர் பவனி |

கேணல் கிட்டு நினைவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக்கு தமிழ் தேசிய விளையாட்டுச் சங்கத்தின் துணைத் தலைவர் இன்பனிடம் கற்பக விநாயகர் ஆலயம் £ 2000 அளித்தது.

**2 - 4 Bedford Rd, Walthamstow, London, E17 4PX**

**Tel : 020 8527 3819**


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Low Cost Accomodations in London

**Finchley Rd, Archway, Holloway Rd**
**Tube Stations அருகாமையில்**

★ Flats

★ Studios

★ Rooms

நூற்றுக்கும் மேற்பட்ட வதிவிடங்கள் வாடகைக்கு உண்டு.

சில நிமிடத்தில் சென்றடையக் கூடியதான போக்குவரத்து வசதிகள் நிறைந்த இடம்.

**மாத வாடகை £400 - £600**

குறிப்பு : மாத வாடகையுடன் ஒரு மாத வாடகை முற்பணமாக செலுத்த வேண்டும். கவுன்சில் ரக்ஸ் மற்றும் கட்டணங்களை குடி இருப்பாளர்களே செலுத்த வேண்டும். மாதாந்த வாடகையை வங்கிக் கட்டளை - Standing Order மூலம் செலுத்த வேண்டும். D.S.S ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

Tel \ Fax : 020 8905 0452
Email : tarrin@desilugroup.com
Web : www.desilugroup.com

Tarrin Constantine, Group Finance Director, Desilu Group of Companies
Collingwood Business Centre, Mercers Rd, London N19 4PU